விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 28 சித்திரை 27 ஷபோ 18 இதழ் 88
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 9-5-1985

## குர்ஷித் ஆலம்கான் பேச்சு: இலங்கை அரசு கடும் தாக்கு!

(கொழும்பு)

இலங்கை இனப் பிரச்னை குறித்து இந்தியாவின் துணை வெளிவிவகார அமைச்சர் ஜனாப் குர்ஷித் ஆலம் கான் இந்தியப் பாராளுமன்றத்தில் தெரிவித்த கருத்துக்களுக்கு நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் கடும் ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டதுடன் தமது கருத்துக்களை ஜனாப் ஆலம்கான் வாபஸ்பெறவேண்டும் என்றும் கோரப்பட்டது.

''ஜனாப் ஆலம்கானின் அறிக்கை முற்றிலும் தவறானது பொறுப்பற்றது இந்தியப் பிரதமர் திரு. ரஜீவ் காந்தியின் ஆக்கபூர்வமான நட்புறவுப் போக்கிற்கு முற்றிலும் முரணானது'' என்று அமைச்சர்கள கருத்து வெளியிட்டனர்.

இந்தியத் துணை அமைச்ச

(8ம் பக்கம் பார்க்க)

Chandikuli Branch Library

# இலங்கையில் மனித உரிமை பாதுகாக்கப்பட வேண்டும்!

## இந்தியா வந்துள்ள ஆஸி. வெளியுறவு அமைச்சர் கவலை

(புதுடில்லி)

''இலங்கையில் மனித உரிமைகள் நிச்சயம் பாதுகாக்கப்படவேண்டும். நான் இலங்கைக்கு விஜயம் செய்யும்போது இலங்கைத் தலைவர்களிடம் இவ்விஷயம் குறித்து விரிவாகப் பேசுவேன்'' என்று ஆஸ்திரேலிய வெளியுறவு அமைச்சர் திரு வில்லியம் ஜோர்ஜ் ஹெய்டன் தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கு விஜயம்செய்துள்ள அவர் நேற்று புதுடில்லியில் செய்தியாளர் கூட்டமொன்றில் பேசுகையில்தான் மேற்படி கருத்தை வெளியிட்டார்.

இலங்கை இனப்பிரச்னைக்கு அரசியல்தீர்வொன்று காணப்படவேண்டியதின் அவசியத்தை வலியுறுத்திய ஆஸி வெளியுறவு அமைச்சர் திரு. வில்லியம் ஜோர்ஜ் ஹெய்டன் ''வன்முறையினால் இனப்பிரச்னையைதீர்த்துவிட முடியாது'' என்று தெரிவித்துள்ளார்.

இலங்கை நிலைமைகுறித்து தமது நாடுகொண்டுள்ள கவலையைவெளியிட்ட அமைச்சர் இலங்கையில் மனித உரிமைகள் காக்கப்படல்வேண்டும் என்றும் தாம் இலங்கை செல்லும் பொழுது இலங்கைத் தலைவர்களிடம் இந்த விடயம் பற்றி பேசப்போவதாகவும் கூறினார். (ரா)

## நம்பூதிரிபாத் மீது கலைஞர் சீற்றம்

(சென்னை)

இலங்கைத் தமிழர் பிரச்னை குறித்து சென்னையில் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய தி. மு. க. தலைவர் கலைஞர் மு. கருணாநிதி இலங்கை தமிழர் பிரச்னை பற்றி பொது மேடைகளில் விவாதிக்கக் கூடாது என்று திரு நம்பூதிரிபாத் கூறியமைக்கு தமது கடு

(8ம் பக்கம் பார்க்க)

## "இலங்கை இனப் பிரச்னை: ரஜீவை அனுரா சந்தித்து தீர்வுகாணவேண்டும்"

(கொழும்பு)

'இந்தியாவில் பலம்வாய்ந்த இராணும். கடற்படை என்பன இருக்கின்றன என்பதை நாம் மறந்துவிடக்கூடாது'' என்று தொழிலமைச்சர் திரு பீ. ஜீ. இம்புலான சபையில் இம்புலான நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றுகையில் தெரிவித்தார்

''எமது எதிர்க்கட்சித் தலைவருக்கும், காந்தி குடும்பத்துக்கும் மிகவும் நெருக்கமான

(8ம் பக்கம் பார்க்க)

## எம். ஜி. ஆரை சத்வால் இன்று சந்திப்பார்

[கொழும்பு]

இலங்கையில் இந்திய உயர் ஸ்தானிகராகக் கடமையகற்றி கனடாவுக்கு மாற்றலாகிச் செல்லும் திரு. எஸ் ஜே எஸ் சத்வால் இன்று தமிழ்நாடு முதலமைச்சர் திரு, எம். ஜி. ராமச்சந்திரனைச்சந்திப்பார்

திரு. சத்வால் இன்று நண்பகல் தாயகம் புறப்படுகின்றார்.

புதுடில்லி செல்லும் வழியில் இன்று மாலை சென்னையில் சில

(8ம் பக்கம் பார்க்க)

## கல்முனை காத்தான்குடியில் உதவி அரசஅதிபர் நியமனம்

(கொழும்பு)

கல்முனையிலும் காத்தான் குடியிலும் முஸ்லிம்களின் நலன்கருதி இரண்டு உதவி அரசாங்க அதிபர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

ஜனாதிபதியின் விசேட பணிப்புரையின் மீதேஇந்த நியமனம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## இளைஞர் பயிற்சிமுகாமை தாக்க முயற்சி!

(கொழும்பு)

வடமத்திய மாகாணத்தில் இளைஞர் பயிற்சிமுகாமொன்றைத் தாக்க முயற்சித்த ஐவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள்மீது நடத்தப்பட்ட விசாரணையில் மேற்படி நபர்களுக்கும் வடபகுதி தீவிரவாத இளைஞர்களுக்கும் இடையே தொடர்பு இருப்பது தெரியவந்துள்ளதாம்.

(8ம் பக்கம் பார்க்க)

## கொக்குவில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

வீதியால் வந்தவர்களைக் கண்டு ஓடிய ஒருவர் துப்பாக்சிச்சூட்டுக்கு இலக்கானார்

மண்டைதீவைச் சேர்ந்த சிவகுலதிலகசிங்கம் என்பவரே துப்பாக்கிச் சூட்டுக்கிலக்

[8ம் பக்கம் பார்க்க]

## ● வெலிக்கடை சிறையிலிருந்து தப்பிஓட முயன்ற கைதிகள்: இருவர் பலி!

(கொழும்பு)

வெலிக்கடைச் சிறையிலிருந்து தப்பி ஓட முயன்ற மூன்று கைதிகளில் இருவர் பலியானார்கள். ஒருவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்

மூன்று கைதிகளும் தப்பி ஓடமுயன்றபோது, சிறைக் காவலர்களுக்கும் கைதிகளுக்குமிடையே கைகலப்பு மூண்டதாகவும் இதனைத் தொடர்ந்த சம்பவத்தில் இருகைதிகள் பலியானதாகவும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது

## றீகனின் 'போர்த் திட்டம்'; செலவில் பெரும் வெட்டு!

(வாஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி றொனல்ட் றீகனின் 'நட்சத்திரப்போர்' திட்டத்திற்குச் செலவிடுவதற்காக அவர் கோரியிருந்த 370 கோடி டாலர்களை அமெரிக்க மக்கள் பிரதிநிதிகள் சபை 250 கோடி டாலராகக் குறைத்துவிட்டது!

(8ம் பக்கம் பார்க்க)

## வடமராட்சியில் நிகழ்ந்த சம்பவம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சிப் பகுதியிலுள்ள ஒரு இடத்தில் நேற்றுக்காலை 11 மணியளவில் பலத்த சத்தத்துடன் இரு குண்டுகள் வெடித்ததைத் தொடர்ந்து பெரும் அதிர்ச்சியும், பதற்றநிலையும் ஏற்பட்டது.

கண்ணிவெடிகளே வெடித்ததாகவும் இருவாகனங்கள் சேதமடைந்ததாகவும் தெரியவருகிறது.

முன்னரும் இதேபகுதியில், குண்டுவெடிப்புச் சம்பவங்கள் இடம்பெற்றதும் அதனைத் தொடர்ந்து பாதிக்கப்பட்ட மக்களில் பலர் அப்பகுதியை விட்டு வெளியேறியிருந்ததும்

(8ம் பக்கம் பார்க்க)

## "பஸ்ஸிலிருந்த நபர்கள் சரமாரியாக சுட்டனர்"

### முருகண்டி சம்பவம்: சாரதி சாட்சியம்

(கா யோகநாதன்)

''நான் செலுத்திச்சென்ற மினிவானை, முருகண்டியில் வைத்து இனந்தெரியாத சிலர் கடத்திச்சென்று விட்டனர். அந்தவான் திரும்பிவரும்வரை வானில்வந்த பிரயாணிகளுடனும், கிளினருடனும் முருகண்டி மடத்தில் தங்கியிருந்தேன் பிற்பகல் 3 மணியளவில் தனியார் பஸ் ஒன்றுவந்து நின்றது அதிலிருந்து துப்பாக்கியுடன் ஒருவர் இறங்கி எங்களை நோக்கிச்சுட, பஸ்ஸின் கண்ணாடிக்கூடாக மற்றவர்கள் சுட்டனர். நாங்கள் அங்கிருந்து ஓடித்தப்பிச்சென்று பற்றைக்குள் பதுங்கியிருந்தோம். எனக்கு காயம்ஏற்பட்டது''

(8ம் பக்கம் பார்க்க)

# அசி ஷளம்பரம்

## விற்பனைக்கு

கொடிகாமம் சந்திக்கு அண்மையில். நல்ல சுற்றுடலில் வீடு கட்ட உகந்த பத்துப்பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: விளம்பரதாரர், 'பொன் இல்லம்', அராலி மேற்கு, வட்டுக்கோட்டை.
3089

கோண்டாவிலில் மலேவேம்பு விற்பனைக்குண்டு. பெரிய பலகைகள் அறுக்கக்கூடியது விபரங்கட்கு: V இரத்தின சபாபதி, ''சாந்தினி வாசம்'' நெட்டிலிப்பாய் வீதி, கோண்டாவில். 3170

இராஜவீதி, கோண்டாவில் ரோட் சந்திக்கு அருகாமையில் ரோட் முகப்புடன் 8 பரப்பு வீடு கட்டக்கூடிய தோட்டக் காணி உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும்; வீ. சோமசுந்தரம், இராஜவீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாய் 3177

## தேவை

உமியிலிருந்து எடுக்கும் வெள்ளைச் சாம்பல் நீறு உடன் தேவை. சாம்பிள் விலை விபரத்துடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 3158, C/o ஈழநாடு லிமிட்., யாழ்ப்பாணம்.
3158

பேக்கரி வேலைகளில் நல்ல அனுபவமும் திறமையும் மிக்க ஒருவர் உடன் தேவை நேரில் வரவும்: சரவணமுத்து யூனியன் பேக்கரி, கண்டிவீதி, சாவகச்சேரி. 3167

கலர் பிலிம் சுருள்களை PROCESSING + PRINTING செய்வதற்கு கொழும்பு ஸ்ருடியோ

## அறிவித்தல்

3-12-1984ல் காலஞ்சென்ற ''அம்பிகாபதி ரெக்ரைல்ஸ்'' உரிமையாளரான சின்னையா முத்துக்குமாரு என்பவரின் சொத்துக்களில் கொடுக்கல் வாங்கல் செய்ய வேண்டியுள்ள அனைவரும் அவரின் மரணசாதன நிறைவேற்றுனரான கீழே கையொப்பமிட்டிருக்கும் சின்னையா முத்துக்குமாரு கனகசபாபதி என்பவராகிய என்னுடன் 31-5-1985 அன்று அல்லது அதற்கு முன்பாக தொடர்பு கொள்ளவும்.

சின்னையா முத்துக்குமாரு கனகசபாபதி
(மரணசாதன நிறைவேற்றுனர்)
628/2, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
1985-ம் ஆண்டு மே மாதம் 1-ந் திகதி. (3172)

## அறிவித்தல்

1960-ம் ஆண்டுக்கு முன்பதாக ஸ்தாபிக்கப்பட்ட எமது மாதர் வைத்திய நிலையமும், (முறிவு-நெறிவு) 1983-6-19ல் ஆரம்பிக்கப்பட்ட மாதர் ஆயுள்வேத விடுநிக்கும் (பொதுவைத்தியம்) இலங்கையில் ப்பாகத்திலும் பிரதிநிதிகளோ உதவியாளர்களோ, கிளை ஸ்தாபனமோ இல்லை என்பதையும் சகலவித தொடர்புகளும் பிரதம வைத்தியர் நீ அருளப்பு அல்லது Dr அருள்டோமினிக் என்பவரிடம் கீழ்க்காணும் விலாசத்தில் தொடர்புகொள்ளவும். இது தவிர்ந்த ஏனைய தொடர்புகளுக்கு நாம் பொறுப்பில்லை.

Dr. அருள. டோமினிக்,
நிர்வாகி,
மாதர் ஆயுள் வைத்திய நிலையம்,
45. சென்.பற்றிக்ஸ் ரோட், குருநகர், யாழ்ப்பாணம்.
5-5-1985. (3178)

# இன்றைய பலன்

மாதம்: சித்திரை
திகதி: 27 (9-5-1985)
வாரம்: வியாழன்
திதி: பஞ்சமி பிற்பகல்வரை
நக்ஷத்திரம்: பூராடம் முன்இரவுவரை

மேடம்: குமுறும் நெஞ்சத்துடன் நாளைக் கடத்துவீர்வீர்கள். இல்லத்திலும் கவலை தோன்றும் புத்திரவழிச் சுகக் குறைவும் உண்டு.

இடபம்: திடீர் பிரயாணமொன்றுக்குத் திட்டமிடப்படலாம். இன்று போக்குவரத்தில் கவனம் வேண்டும் பொருளும் தவறக்கூடும்.

மிதுனம்: குடும்பத்தில் குறைகேட்க நேரும் குறுக்குவழித் தலையீடு தவிர்க்கப்படல் வேண்டும் இன்று எவ்விடயத்திலும் கவனம் வேண்டும்.

கடகம்: உங்கள் விடயங்கள் அனைத்தும் இன்று வேவு பார்க்கப்படும் வீண்பழிக்கும் ஆளாக நேரலாம் நிதானம் வேண்டும்.

சிங்கம்; பிதாவழிச் சுகக் குறைவிற்கும் இடமுண்டு பெரியோர் ஆசியும் பொது ஜன உதவியும் கிடைக்கும் இன்று இறைவழிபாடு நன்று.

கன்னி: கடமைபுரியுமிடத்தில் கருத்து வேற்றுமைகள் தோன்றலாம் மேலதிகாரிகளின் கண்டிப்புக்கும் ஆளாக நேரும்.

துலாம்: வணிகர்களுக்கு எதிர்பார்த்த வரவில் மந்த நிலை தோன்றும் இன்று கொடுக்கல்வாங்கலைப் பின் போடவும்.

விருச்சிகம்: இன்று அபாயகரமான காரியங்களில் பங்கு பற்றக்கூடாவாம் போக்குவரத்தில் அவதானம் வேண்டும்.

தனுசு: இதயத்திற்கு இதம் தரும் செய்தியொன்று கிடைக்கலாம் எதிர்பார்க்கும் விடயம் ஒன்று கைகூடும்.

மகரம்: எதிர்பார்த்த வேதனம் தடைப்படலாம் சினேகித வழியாலும் சோர்வுக்கு இடமேற்படும் மனத்திடம் வேண்டும்.

கும்பம்; சகோதர வழியாலும் சஞ்சலமுண்டு முயற்சிக்கும் விடயம் குறித்து வேதனைப்பட நேரும் அமைதி வேண்டும்.

மீனம்: மாதுருவழிப் பெருமைக்கும்பொருள் வரவிற்கும் இடமுண்டு வாகன நலனுடன் வரவிலும் திருப்தியுண்டு.

திருமலை
வே. ரவீந்திரன்

# 14வயது சிறுவன் தற்கொலை!

(மாவிட்டபுரம்)
தோட்டவேலைக்கு உதவியாக இருந்த 14 வயது சிறுவன் ஒருவன் நஞ்சருந்தி உயிரைப் போக்கிக் கொண்டான்.

ஈவினையைச் சேர்ந்த ஆசைப்பிள்ளை துரைதம்பி என்பவரது வீட்டில் தோட்டவேலைக்கு உதவியாக இருந்த பெரிய கறுப்பன் அழகதுரை என்னும் சிறுவனே இவ்வாறு மரணமானான்.

வீட்டுக்காரர் தமக்கு பிள்ளை இல்லாமையால் இவரை மிகவும் அன்பாக வளர்த்துவந்ததாகவும், சம்பவதினம் தோட்டவேலைக்குச் சென்றவர் அங்கு நஞ்சருந்தியதாகவும் விசாரணையில் தெரியவந்தது.

திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. நா. தம்பிராசா தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

# வேண்டுகோள்

மே மாதம் மூன்றும் திகதி வடமாகாணம் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசக்களஞ்சியத்திலிருந்து ரூபா 53,700/- (ஐம்பத்தி மூவாயிரத்தி எழுநூறு) பெறுமதியான 77 மீன் தூள் மூடைகள் ஆயுதம் தாங்கிய ஒரு கோஷ்டியினரால் களவாடப்பட்டுள்ளன.

இதனுல் குருநகர், மண்டைதீவு வாசிகளாகிய மீனவர்களதும். சமாச ஊழியர்களதும் அன்றுட சீவியம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

ஏலவே நொந்திருக்கும் இவர்களது வாழ்க்கையை வளம்பெறச் செய்யும் வண்ணம் களவாடிய இப்பொருட்களை மீளப்பெற்றுத்தருமாறு பொதுமக்களையும், நலன்விரும்பிகளையும் பணிவன்புடன் வேண்டுகிறோம்.

வடமாகாணம் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்,
201, 3-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 23420 (3169)

# 31-வது நாள் நினைவஞ்சலி

## சோமசுந்தரம் உதயகுமார்

அன்னைமடியில்: 7 - 2 - 67
இறைவனடியில்: 9 - 4 - 85



அன்பின் பிறப்பிடமாய் அறிவின் இருப்பிடமாய்ப் பண்பின் சிகரமாய் எல்லோருக்கும் இனியவனாய் 18 ஆண்டுகள் அவனியில் வாழ்ந்து இறைவனடி எய்திய எங்கள் அன்புச் செல்வமே! உனது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

தந்தை மு. சோமசுந்தரம் [பிரான்ஸ்), தாய் கமலாதேவி, சகோதரர்கள் ரவிக்குமார் [பிரான்ஸ்], சிவகுமார், ஜெயக்குமார், சகோதரிகள் சகுந்தலா, யஞ்சுளா, பேரன், பேர்த்தி, உற்றூர், உறவினர்.

அம்மன் கோவிலடி,
கோண்டாவில். 3180


றெருசோ ஷிப்ஸ்
**TERRAZZO CHIPS**
IMPORTED

★ கலர் பவுடர் (எல்லா வர்ணங்கள்) (GERMAN AND HOLAND)
★ அலுமினியம் தகடுகள் (18g x 16g)
★ வெள்ளைச் சீமெந்து
★ காபரண்டம் கற்கள் (FLOOR CUTTING STONE)
★ TERRAZZO மற்றும் தரைக்குத் தேவையான சகல பொருட்களும் கிடைக்குமிடம்

Rs. 55/-க்கு மேல்

றம்சன்ஸ்
443, பழைய சோனகத் தெரு,
கொழும்பு-12
தொலைபேசி: 34411 — 31511



★ நில்லுங்கள்
★ கவனியுங்கள்,
★ புறப்படுங்கள்
தாமதமின்றி
லண்டன் — பேர்லின்
செல்வதற்கு
உடன் தொடர்பு கொள்ளவும்

**AIR-TRANSIT**

ஏயார் ட்ரான்சிற்

99-2/56 B, சபூர் பில்டிங், 2 வது மாடி, கொழும்பு - 1. போன்: 549365

538 (290), ஆஸ்பத்திரிவீதி, (ஆஸ்பத்திரி முன்பாக) யாழ்ப்பாணம். போன்: 22689

# சோவியத்தின் சமாதான முயற்சிகளுக்கு
# இந்தியா முழுமையான ஆதரவு!

## பாஸிச வெற்றியின் 40வது ஆண்டு நிறைவு குறித்து ரஜீவ் செய்தி

(புதுடில்லி)

சர்வதேச நெருக்கடியைத் தளர்த்தவும், அமைதி மற்றும் சமாதானத்தை நிலைநாட்டவும் சோவியத் யூனியன் எடுத்துவரும் சகல நடவடிக்கைகளையும் இந்தியா வரவேற்கிறது என்று இந்தியப் பிரதமர் ரஜீவ் காந்தி தெரிவித்துள்ளார்.

இரண்டாவது உலக யுத்தத்தில் ஜெர்மன் பாஸிஸத்தின் தோல்வியைக் குறிக்கும் நாற்பதாவது ஆண்டு விழாவையொட்டி சோவியத் மக்களுக்கு அவர் அனுப்பியுள்ள செய்தியில் இதனைத் தெரிவித்துள்ளார்.

இரண்டாவது உலக யுத்தத்தில் சோவியத் யூனியனின் கடும் எதிர்ப்பும் தாக்குதலும் இருக்கவில்லையானால் பாஸிஸ கொள்கையை அப்போது தோற்கடித்திருக்க முடியாது போயிருக்கும். உலக வரலாற்றிலே சோவியத் யூனியன் பாஸிஸகொள்கையைஎதிர்த்த போது இந்தியா உள்நாட்டில் பிரிட்டிஷ்ஏகாதிபத்தியத்திற்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்து பெரும் விடுதலைப் போராட்டத்தை நடத்தியது என்றும் தனது செய்தியில் திரு. ரஜீவ் சுட்டிக்காட்டியுள்ளார்.

பெரும் அணு ஆயுத சீரழிவுகளில் இருந்து மனித சமுதாயம்காப்பாற்றப்படவேண்டும். தரையில்இருந்தும், விண்ணில் இருந்தும், கடலில் இருந்தும் கூட அணு ஆயுத அபாயத்தை இன்று எதிர்நோக்கவேண்டியுள்ளது.

இந்தியா அணிசேரா நாடுகளின் தலைமையில் உலகஅமைதியைக்காக்கவும், அணு ஆயுதப் போரைத் தவிர்க்கவும் தன்னாலானவற்றைச் செய்து வருகிறது. இந்த அடிப்படை நோக்கத்திற்காக சோவியத் யூனியன் சர்வதேச அரங்கில் எடுத்துவரும் ஒவ்வொரு நடவடிக்கைகளையும் இந்தியா ஆதரிக்கின்றது என்றும் அவர் தனது செய்தியில் தெரிவித்துள்ளார். [து]

## "இந்துசமுத்திரம் அமைதிப் பிராந்தியம் ஆகவேண்டும்"

### இந்திய பாதுகாப்பமைச்சர் கருத்து

(புதுடில்லி)

"இந்து மா கடல்ப் பிராந்தியத்தை அமைதிப் பிராந்தியமாக பராமரிப்பதற்கு இந்து மா கடல் கரையோர நாடுகள் ஒன்று சேர்ந்து போராட வேண்டும்" என்று இந்திய பாதுகாப்பு அமைச்சர் திரு, பி வி. நரசிம்ராவ் அந்நாடுகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது இன்றைய உலகிற்கு மட்டுமல்லாது நமது வருங்கால சந்ததியினரின் நலனுக்கும் மிகஅவசியம் இல்லாவிடில் அணு ஆயுத போருக்கு பின் உருவாகும் ஆபத்துக்கள் நிறைந்த வாழ்வை அவர்கள் எதிர் நோக்க நேரிடும் என்றும் அவர் கூறினார்.

மனச்சாட்சியுள்ள ஒவ்வொரு நாடும் அணுஆயுத குவிப்பு பற்றிய விடயத்தை தாமே சிந்தித்து பார்க்க வேண்டும்.

## 'நமது கழகம்' கட்சி தீர்மானம்

[சென்னை]

இலங்கை இனப்பிரச்னையைத் தீர்க்க இலங்கை அரசுக்கும் தமிழ் மக்களுக்குமிடையே இந்திய அரசை மத்தியஸ்தம் செய்யுமாறு கோரும் தீர்மானமொன்று 'நமது கழகம்' கட்சியின் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேலும்இலங்கைகடற்படையினரின் தாக்குதல்களால் இன்னல்படும் இராமேஸ்வரம் மீனவர்களுக்குப் பாதுகாப்பு வழங்குமாறும் 'நமதுகழகம்' கட்சி இந்திய அரசைக் கோர வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

## நீலகிரி ரயிலுக்கு பயமுறுத்தல்

[சென்னை]

இலங்கை பிரச்னையில் இந்திய மத்திய அரசு அசமந்தமாக இருந்துவருவதாகவும் அதனைப் போக்கும் விதத்தில் நீலகிரி கடுகதி ரயிலுக்கு குண்டு வைக்கப்படும் என்றும் ராம்தாஸ் குப்தா என்பவர் ரயில்வே பகுதியினருக்கு கடிதம் எழுதியிருந்ததையடுத்து பெரும் பரபரப்பு ஏற்பட்டு பலத்த சோதனைகள் நடத்தப்பட்டதில் மேற்படி தகவல் வெறும் புரளி என்பது தெரியவந்தது.

## "இந்தியாவும், பாகிஸ்தானும் அணு ஆயுத உற்பத்தியை தவிர்க்கவேண்டும்!"

### பாகிஸ்தான் விருப்பம்

காத்மண்டு, மே, 9

இந்தியாவும்,பாகிஸ்தானும் அணு ஆயுத உற்பத்தியைத் தவிர்ப்பதற்கான ஒப்பந்தம் ஒன்றைசெய்துகொள்ளபாகிஸ்தான் விருப்பம் தெரிவித்துள்ளது.

இதுசம்பந்தமான ஒப்பந்தம் ஒன்றை செய்து கொள்ள விரும்புவதாக நேபாளத்திற்கு இரண்டு நாள் விஜயத்தை மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் வெளியுறவுச் செயலாளர் திரு. நியால் ஏநாயக் கூறியுள்ளார்.

காத்மண்டுவில் நிருபர்களிடம் பேசிய அவர் தெற்காசியாவில் அணு ஆயுத முகாமை உருவாக்காத நிலையை பாகிஸ்தான் ஆதரிப்பதாகத் தெரிவித்தார்.

இந்தியாவும் பாகிஸ்தானும் பரஸ்பரம் அணு உற்பத்தி அமைப்புக்களை பிரதிநிதிகளை நேரில் அனுப்பி கண்காணிக்க வேண்டும் எனவும் அவர் கூறினார். (து)

## லெபனனில் சண்டைகளை நிறுத்த ஜனாதிபதி முயற்சி

பெய்ரூட்., மே. 8

லெபனன் தலைநகர் பெய்ரூட்டில் பல்வேறு பிரிவினருக்குமிடையே நடைபெறும் யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்கு முன்னோடியாக லெபனன் ஜனாதிபதி அமீன் ஜாமயல் தனது இராணுவத் தளபதிகளை அழைத்து ஆலாசனை நடத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே வேளை லெபனனில் இருந்து ஜூன் மாத ஆரம்பத்திற்குள் துருப்புகளை திருப்பி அழைக்கப் போவதாக இஸ்ரேல் அறிவித்துள்ளது.

ஆனால் கடந்த பத்துத் தினங்களாக பெய்ரூட்டில் சண்டை ஓயாமல் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது விமான நிலையம், வைத்தியசாலை ஆகியவற்றின் மீதும் குண்டுத் தாக்குதல்கள் இடம் பெற்றுள்ளன.

நேற்று முன்தினம் நடைபெற்ற இத்தாக்குதல்களில் ஐந்துபோர் கொல்லப்பட்டுள்ளார்கள் என்றும் இருபத்தியொருபோர் காயமடைந்துள்ளார்கள் என்றும் தெரிகிறது. (து)

## "மேற்கும்,கிழக்கும் இணைந்த ஐரோப்பாஉருவாகவேண்டும்"

### ஜனாதிபதி றீகன் விருப்பம்

பொன், மே, 9

"ஜனநாயகமும், சுதந்திரமும் நிலைபெற வேண்டுமானால் பொருளாதார சுபீட்சம் அவசியம்" என்று அமெரிக்க ஜனாதிபதி றொனல்ட் றீகன் தெரிவித்துள்ளார்.

மேற்கு ஜெர்மன் நகரொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

சுதந்திரமும், ஜனநாயகமும் தழைத்தோங்கும் ஐரோப்பாவைக் கட்டியெழுப்புவதற்கு மேற்கு ஜெர்மனியின் இளைஞர்கள் முன்வரவேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

மேற்கு ஜெர்மன் அதிபர் கெல்மட் ஹேல் சகிதம் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட திரு றீகன் கிழக்கும் மேற்கும் இணைந்த ஐக்கிய ஐரோப்பா உருவாகவேண்டும் என்றார்.

இந்தக்கூட்டம் நடைபெற்ற மண்டபத்திற்கு வெளியே நூற்றுக்கணக்கான இளைஞர்கள் கூடிநின்று அமெரிக்காவின் கொள்கைகளுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்தனர்.

## "கடத்தியவர்கள் நன்கு உபசரித்தார்கள்"

### விடுதலையானவர்த்தகர்தகவல்

(யாழ்ப்பாணம்)

"கடத்திச் சென்றவர்கள், எவ்வித கஷ்டமும் தராது, விரும்பிய சாப்பாடு தந்து நன்கு கவனித்தார்கள்" என்று விடுதலை செய்யப்பட்ட வர்த்தகர் திரு கே எஸ். பொன்னம்பலம் தெரிவித்தார்.

தன்னை கண்களைக்கட்டி வானில் கூட்டிச் சென்றவர்கள் வீடொன்றில் வைத்திருந்தார்களென்றும் அங்கு விசாரணை செய்தார்களென்றும் கூறினார்.

பிழையான புகாரின் பேரில் கடத்தி வந்து விட்டதாகவும் விசாரணையின்பின் அப்படியொரு குற்றச் சாட்டும் இல்லையென்று தெரியவந்திருப்பதாகவும், அதையிட்டு கவலையடைகிறோம் என்று கடத்தி சென்றவர்கள் தம்மிடம் கூறியதாகத். தெரிவித்தார்.

வியாபாரம் மற்றும்லொறி கொள்முதல் பற்றியும் கேள்விகள் கேட்கப்பட்டதாகவும் அதற்கு விளக்கம் கொடுத்ததாகவும் கூறினர்.

லொறி கடன்பெற்று வாங்கியதாகத் தெரிவிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

கண்களைக் கட்டியபடி, நேற்று முன்தினம் நள்ளிரவு வீட்டில் கொண்டு வந்து விட்டார்கள் என்றும் கூறினர். (க)

## உபமின்நிலையம்

(மட்டுவில்)

சாவகச்சேரி நகரசபை, சாவகச்சேரி நகரசபையின்நான்காம் ஐந்தாம் வட்டார மின்பாவனையாளர் நலன்கருதி புதிய உபமின்நிலையம் ஒன்றை அமைத்து வருகிறது,

சுமார் 5,25,000 ரூபா செலவில் அமைக்கப்படும் இந்தப் புதிய உபமின் நிலையம் இம்மாத இறுதிக்குள் இயங்க ஆரம்பிக்கும் என்று நகரசபைச் செயலாளர் திரு. த நவரத்தினராஜா தெரிவித்தார்.

## மற்றும்மொரு பிரபல வர்த்தகர் கடத்தப்பட்டார்

(யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் வர்த்தகசங்கத் தலைவர் திரு. எஸ். வி முருகேசு நேற்று முன்தினமிரவு இனந்தெரியாதவர்களினால் கடத்திச் செல்லப்பட்டார்,

ஏற்கெனவே கடத்தப்பட்ட வர்த்தகர் திரு பொன்னம்பலம் தொடர்பான விசாரணையொன்றில் சில தகவல்கள் பெறும் பொருட்டே இவர் கடத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது

வான் ஒன்றில் வந்த இனந்தெரியாதவர்கள், திரு. முருகேசுவை அவரின் வீட்டிற்குச் சென்று கடத்திச் சென்றதாகக் கூறப்படுகிறது.

வர்த்தகசங்கத் தலைவர்கடத்தப்பட்டது தொடர்பாக யாழ் வர்த்தகசங்க கமிட்டி கூடி ஆலோசனை செய்யவிருக்கிறது.

## திருநெல்வேலியில்

[யாழ்ப்பாணம்]

திருநெல்வேலியில் ரியூசனுக்குச் சென்ற மாணவர்மீது நேற்றுக்காலை துப்பாக்கிச்சூடு நடந்தபோதும் எவரும் காயமடையவில்லை.

வெடிச்சத்தம் கேட்டதும் மாணவர் குறுக்கு ஒழுங்கையால் தப்பிச் சென்றனராம். [க]

## கொள்ளை

(வவனியா)

வவனியா இறம்பைக்குளம் அந்தோனியார் கோவிலுக்கு அருகாமையிலுள்ள நான்கு கடைகள் ஒரே இரவில் உடைக்கப்பட்டு பொருடகள் அபகரிக்கப்பட்டுள்ளன.

உணவுப்பொருட்கள், சவர்க்கார வகைகள் போன்றவையே கூடுதலாக களவாடப்பட்டுள்ளன.

இத்திருட்டுச் சம்பவங்கள் தொடர்பாக வவனியா பொலிசில் புகார்செய்யப்பட்டுள்ளது.

## மணிவாக்கு

உள்ளூரில் இருக்கும் கோயிலில் பூஜை இல்லாமல், விளக்கு எரியாமல் இருக்கும்போது ஐம்பது ரூபாய் பஸ் டிக்கட் வாங்கி ஷேத்திராடனம் செய்தால் நிச்சயம் பயன் ஒன்றும் கிடைக்காது.

— ஜயேந்திர சரஸ்வதி

## நமது நோக்கு

### "தமிழருக்கெதிரான துஷ்ட நடவடிக்கை"

யாழ்ப்பாணக் குடாநாட்டில் இன்று பேசப்படுவது செந்நீர்ப்பாசன வசதிகள பற்றியே!

ஆனால் இந்த விடயம் நன்றாகத் துவைத்தடித்த ஆடைபோல் பழுதுபட்டிருக்கிறது.

இதற்கு எதிர்நீச்சல் போடுவதுபோல் அமைவது டாக்டர் ஆர் டபிள்யூ வி. தம்பையா எமது பத்திரிகையில் எழுதி இருக்கும் "யாழ்ப்பாணக் குடாநாட்டு நீர்ப்பாசன வசதிகள்" என்ற கட்டுரை இன்றைய நெருக்கடிக்குப் பொருத்தமான வகையில் அதில் காணப்படும் கருத்துக்களும், புள்ளிவிபரங்களும் வாசகர் கவனத்தை நிச்சயம் ஈர்க்கும்.

பிரிட்டிஷ் ஆட்சியில் யாழ்ப்பணக் குடாநாட்டின் நீர்வள விருத்தி பேசப்பட்டது; திட்டம் தீட்டப்பட்டது; ஆதரவு காட்டப்பட்டது; விருப்பம் தெரிவிக்கப்பட்டது; ஈற்றில் கைவிடப்பட்டது. இன்றும் இதேநிலை தொடர்கிறது

போத்துக்கேயர், டச், பிரிட்டிஷ் ஆட்சிகளின் நயநட்டங்களை அனுபவித்த சந்ததியினரின் வழித்தோன்றல்களே இன்றைய இளைஞர் சந்ததி

சுதந்திர இலங்கையில் தமிழருக்கு இன்று போத்துக்கேயர் ஆட்சி மீண்டும் தொடர்வது போல் தோன்றும். கோவில்கள் இடிக்கப்படுவதும் சமய ரீதியில் மக்கள் கொல்லப்படுவதும் போத்துக்கேயரின் சாதாரண சாதனைகள். மிருகபலியை, பசுக் கொலையை உணவுக்கு நிர்ப்பந்தித்த போத்துக்கேயர் நரபலியில் கடினமாக இருந்ததாய் கூறமுடியாது.

மத மாற்றத்துக்கு ஒரு உபாயம் கிடைததுவிட்டால் சீவ அபாயம் அதிகம் இருந்திருக்காது; இருப்பினும் அவர்களின் வழித்தோன்றல்கள் இன்றும் இந்நாட்டில் தொழிற்படுகின்றனரென்று நினைக்க வேண்டியிருக்கிறது. தினசரி இங்கு நடைபெறும் கொலை எல்லை கடந்துவிட்டது.

உலகில் பொதுவாகவும் ஆன்மீக உணர்வு விருத்தியடைந்த கீழைத்தேசங்களில் சிறப்பாகவும் காணப்படாத மிருகத்தனம்இன்று இங்கு கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கிறது; எனவே இதன் முடிவு கிட்டிவிட்டதாக நினைப்பதே தப்பும் வழி.

டாக்டர் தம்பையா கவலைப்படுவது போல் வசதி படைத்த தமிழர்கள், வேலை தேடும் இளைஞர்கள் பலர் நாட்டைவிட்டு வெளியேறுகின்றனர் திறமை படைத்த இளைஞர் விரக்தி கொண்ட நிலையில் துப்பாக்கியில் நம்பிக்கை வைத்துள்ளனர்.

இந்த நிலையில் தான் தமிழருக்கு உணவுற்பத்தியே முதன்மையான பணி என்பதை சரியாக வற்புறுத்துகிறார் டாக்டர் தம்பையா.

"வறண்ட பிரதேசமாகிய யாழ்ப்பாணத்தை கல்வியறிவுடைய மக்கள் மிகுந்து வாழும் நாடாக்கிய பெருமைக்கு மக்களின் குன்றாத உழைப்பே காரணம்" என்று சுமார் எழுபது ஆண்டுகளுக்கு முன் கௌரவ கே. பாலசிங்கம் கூறியிருக்கின்றார். அதே சமயம் கருத்தற்ற விழாக்களில் விரயம் காணப்படுவதாகவும் எச்சரித்திருக்கிறார்.

இந்தத் தீர்க்கத்தரிசி மகாவலித் திட்டத்தை முதன் முதல் அலசிய இலங்கை வாசியென்பதை நாம் இன்று நினைவுபடுத்த வேண்டும்

1919ம் ஆண்டு இலங்கை சட்டசபையில் "மகாவலி நீரை தம்புள்ளை முதல் ஆனையிறவுவரை கொண்டு செல்வதை எந்தவகையிலும் ஒரு பொறியியல் அல்லது நிதி விரயமாகக் கொள்ள முடியாது" என்று அடித்துக் கூறியிருந்தார் அமரர் பாலசிங்கம்.

"நாட்டில் வாழும் எல்லோருக்கும் உரித்தான மகாவலித் தண்ணீர் யாழ்ப்பாண நீரேரி ஒரு பூரண நன்னீராக்கப்பட்டால் 35 சதுரமைல் பரப்புள்ளதாக ஒரு பூரண நீர்த் தேக்கம் ஒன்றிணைந்த ஒரு பெரும் தேக்கம் போல காட்சிதரும்" என்று விளக்கமளிக்கிறார் டாக்டர் தம்பையா. எந்த வறட்சியிலும் நீர் கிட்டும்.

வெள்ளத்தாலும் வறட்சியாலும் பாதிக்கப்படும் 'வானம் பார்த்த பூமியில் வாழும்' யாழ்ப்பாண மக்கள் நீர்ப்பாசன திட்டத்தில் ஊக்கம் கொள்வது மிகமிக அவசியம்.

எங்கு சென்றும் இலகுவாகப் பணம் திரட்டும் திறமை இங்கு வாழவிருக்கும் மக்களுக்கு நிரந்தர பயனை அளிக்காது

"ஆனையிறவுக்கணித்தான பரந்தன் கிளிநொச்சி யாழ்ப்பாண மாவட்டத்துக்கு என்றும் சோறுபோடும்" என்று அடிக்கடி சொல்லி வந்தார் சிவயோக சுவாமிகள்.

இக்கூற்றைப் பெலப்பிக்கும் வகையில் அரசாங்கம் உத்தேசிக்கும் 2 லட்சம் சிங்கள மக்கள் குடியேற்றம், தமிழருக்கெதிரான மட்டுமல்ல டாக்டர் கூறுவது போல "மாபெரும் துஷ்டத்தனமான நடவடிக்கை" என்பதை அரசும் மக்களும் உணரவேண்டும்.

---

● சிகரெட் கொள்ளையின் எதிரொலி

# யாழ். ஐ. வி. சங்க ஊழியர் வெளிநடப்புச் செய்தனர்!

## வீதியெங்கும் கேள்விச் சுலோகங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். ஐக்கிய வியாபாரச் சங்கத்தில் 10 லட்சம் ரூபா சிகரெட் கொள்ளையை ஆட்சேபித்து நேற்று சகல ஊழியரும் வெளி நடப்பு செய்து வீதியோரத்தில் மறியல் செய்தார்கள்.

யாழ் நகரில் இரு இடங்களில் இந்த மறியல் போராட்டம் நடந்தது.

வீதியெங்கும் சுலோக அட்டைகள் தொங்க விடப்பட்டிருந்தன,

"கோழிக்கள்ளனுக்கு மரண தண்டனை, கொள்ளையடிப்பவனுக்கு என்ன தண்டனை? இரவில் கொள்ளை பகலில் விற்பனை இதுதான் இயக்கமா? உதவி முகாமையாளர் உயிரை குடித்த கொள்ளையர் வேறுயார் உயிரைக் குடிக்க உத்தேசம், தனியார் ஸ்தாபனத்தில் 10 லட்சம் கொள்ளை! லட்சக் கணக்கில் கொள்ளையடிப்பவரின் லட்சியமென்ன?, பேருக்கு இலட்சியம்' தேவைக்கு கொள்ளை, தமிழ்ன கொள்ளையடிப் போருக்கு ஏன் வேண்டும் தமிழீழம்" என்று சுலோகங்கள் அட்டைகளில் எழுதப்பட்டிருந்தன. (க)

---

# குளம்வற்றும் என்று குடல் வற்றிச் செத்த கொக்கு!

## ஈழத்தமிழர் நிலையும் இதுதானா?

'குளம் வற்றும் என்று குடல் வற்றிச் செத்ததாம் கொக்கு''

ஈழத்தமிழரின் இன்றைய நிலையும் இந்தப் பழமொழியையே நினைவூட்டுகிறது

இலங்கைத் தமிழர் பிரச்னையில் இந்தியா இனிமேல் அசிரத்தையாக இருக்க முடியாது. தமிழினம் இலங்கையில் முற்றாக அழிக்கப்பட்டபின்னர் ஸ்திரமான நடவடிக்கைகளை எடுப்பதில் அர்த்தமில்லை இந்திய அரசு தமிழ் மக்களுக்கு ஏதாவது வழியில் உதவவேண்டுமானால் உடனடியாக அதனைச் செய்ய வேண்டும்'' என்று திராவிடமுன்னேற்றக் கழகத் தலைவர் கலைஞர் மு. கருணாநிதி தெரிவித்திருப்பது "குளம் வற்றும் என்று குடல் வற்றிச் செத்த கொக்கின் நிலையில் இலங்கைத் தமிழர்கள் இருக்கிறார்களென்பதை எடுத்துக் காட்டுகிறது.

"இந்தியப் பிரதமர் திரு ரஜீவ்காந்தி, சுரங்கத்தின் இறுதியில் ஒளி தெரியுமென்று கூறியுள்ளார். ஆனால் இலங்கை விஷயத்தில் சுரங்கம் நீண்டுகொண்டு போகிறதே தவிர ஒளியைக் காணமுடியவில்லை'' என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் கிராமியக் கைத்தொழில் அமைச்சருமான திரு எஸ். தொண்டமான் இலங்கையில் இந்தியத் தூதுவராகப் பணியாற்றி மாற்றம் பெற்றுச் செல்லும் திரு. எஸ். ஜே எஸ் சத்வாலுக்கு அளிக்கப்பட்ட பிரிவுபசார வைபவத்தில் பேசுகையில் சுட்டிக் காட்டியிருப்பதும் இலங்கையில் தமிழ் மக்களின் அவல நிலையையே எடுத்துக்காட்டுகிறது.

தமிழ்மக்கள் அவர்கள் பிறந்த மண்ணிலேயே அகதிகளாக்கப்படுகிறார்கள்.

'தென்னமரத்தில் தேள் கொட்டினால் பனைமரத்தில் நெறிகட்டியமாதிரி' எங்கோ எவரோ நடத்தும் தாக்குதல்களின் எதிரொலியாக வீதியில் செல்லும் இளைஞர்களை நிறுத்திவைத்துச் சுட்டுக் கொல்லும் காட்சி தர்பார் இலங்கையில்தான் நடக்கிறது.

போக்குவரத்துச் சேவையிற் படும் வாகனங்களும் அதில் பயணம் செய்யும் தமிழ்ப்பிரயாணிகளும் தங்கள் இடங்களுக்குப் பாதுகாப்பாகப் போய்ச் சேர்வது நிச்சயமில்லை.

### நாளொன்றுக்கு 25 தமிழர் கொலை

சராசரியாக நாளொன்றுக்கு குறைந்தது இருபத்திஐந்து தமிழர்கள் இலங்கையில் கொல்லப்படுகின்றார்கள். இவர்களில் இளைஞர்களே பெரும்பாலானவர்கள்.

படிப்படியாகத் தமிழர்களைக் கொல்வதன்மூலம் பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்டிவிடலாமென அரசு நினைப்பதாகத் தோன்றுகிறது

தமிழர் பிரச்னைக்கு பேச்சுவார்த்தைமூலம் அரசியல் தீர்வு காணப்பட வேண்டுமென்று பலரும் ஒரே பல்லவியைப் பாடி வருகின்றனர்

அரசுக்கு இதில் நம்பிக்கை இருப்பதாகத் தெரியவில்லை மற்றைய அரசியல் கட்சிகளும் கூட இனப்பிரச்னைக்கு நிரந்தரமான தீர்வு காணப்பட வேண்டுமென்பதில் அக்கறை செலுத்துவதாகக் காணோம்

### எஸ். எம். ஜி.

ஆட்சி அதிகாரப் போட்டியில் இனப்பிரச்னையை-தமிழ் மக்களை-இன்னும் பகடைக் காயாக உபயோகிப்பதில் தான் சிங்கள அரசியல்வாதிகள் இன்னமும் நாட்டம் கொண்டிருப்பதாகவே தோன்றுகிறது,

இலங்கையில் இன்று தமிழ் மக்கள் உரிமைக்காகப் போராடும் நிலையில் இல்லை. அவர்கள் இன்று உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

சொந்த மண்ணிலேயே தமிழர்கள் அகதிகளாக்கப்படுகின்றார்கள்.

வீடுகள் அழிக்கப்படுகின்றன; எரிக்கப்படுகின்றன

உடமைகள் கொள்ளையடிக்கப்படுகின்றன.

வீதிகளில் பாதுகாப்பாகத் தமிழர்கள் நடமாட முடியவில்லை.

### தொண்டமானும் கருணாநிதியும்

இந்நிலையில் அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் நல்ல தொரு யோசனையை திரு சத்வாலின் பிரிவுபசார வைபவத்தில் தெரிவித்திருக்கிறார்

"பாலஸ்தீன விடுதலைஇயக்கம் தனது உரிமைகளுக்காக வன்முறையில் போராட்டங்களை நடத்தி வருகின்றபோதிலும் ஐ. நா ஸ்தாபனம் அதனை அங்கீகரித்துள்ளது. இலங்கையிலும் அதிகரித்துச் செல்லும் மானிட அழிவைத் தடுக்கவும், இனப் பிரச்னைக்கு உடனடித் தீர்வு காணவும் இதுபோன்ற ஐ. நா.வின் அணுகுமுறை ஒன்று ஏற்படாதா?'' என்று அமைச்சர் தொண்டமான் கேட்டிருக்கிறார்

இலங்கை நிலைமைகள்காட்டுமிராண்டித் தனமானவையாகவும் கொடூரமானவையாகவும் இருந்து வருகின்றனவென்றும் திரு தொண்டமான் எடுத்துக்காட்டியிருக்கிறார்

துணிவுக்கு ஒரு தொண்டமான் என்று பாராட்ட வேண்டும்!

பாலஸ்தீன விடுதலை இயக்கம், தென்மேற்கு ஆபிரிக்க விடுதலை ஸ்தாபனம் (சுவாப்போ) ஆகிய விடுதலை இயக்கங்களை அங்கீகரித்து அவற்றுக்குப் பூரண ஆதரவளித்து வரும் இந்தியா இலங்கைத் தமிழர் விடுதலை இயக்கங்களையும் அங்கீகரிக்க வேண்டும் என்று கோரும் மகஜர் ஒன்றை திராவிடமுன்னேற்றக்கழகத் தலைவர் கலைஞர் மு கருணாநிதி விரைவில் இந்தியப் பிரதமர் திரு ரஜீவ் காந்தியிடம் கையளிக்கவிருக்கிறார்

ஐ நாவில் இலங்கைத் தமிழர் பிரச்னையை எழுப்பவும் ஐ நா. சமாதானப்படையொன்றை இலங்கைக்கு அனுப்புமாறு கோரவு ஒரு வழி பிறக்கலாம் இதேசமயம இலங்கையில் இனககலவரங்களபற்றி சர்வதேச விசாரணைக்கமிஷன ஒன்றை நியமித்து விசாரணை செய்யுமாறும் கோருவதற்கு வாய்ப்பேற்படலாம்

இதேவேளை இலங்கைத்தமிழர் விடுதலை இயக்கங்கள் ஒரு தலைமையின்கீழ் அல்லது ஒரு கூட்டமைப்பின்கீழ் ஒன்றுபட்டாலே சர்வதேச ரீதியில் அங்கீகாரம் பெறுவதற்கும் வெளிநாட்டில் தற்காலிக அரசு நிறுவி வெளிநாடுகளின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கும் வாய்ப்பு ஏற்படும

இவற்றை விரைவாகச் செயல்படுததாவிடில் விரைவாக இங்கு தமிழினம அழிநது விடுட.

---

### பயிற்சி வகுப்பு

பச்சிலைப்பள்ளி]

மருதங்கேணி-செம்பியன் பற்று ஆரம்ப சுகாதார கவனிப்பு நிலையத்தின் ஆதரவுடன் சுகாதாரத் தொண்டர்களுக்கான பயிற்சி வகுப்புக்கள் செம்பியன்பற்று அரசின வைத்தியசாலையில் நடத்தப்பட்டன

சுகாதாரத் திணைக்கள அதிகாரிகளும் வைத்திய அதிகாரிகளும் பயிற்சி வகுப்புக்களை நடத்தினர்.

# பாழடைந்த நிலைக்கு தள்ளப்படும் புற்றுநோய் சிகிச்சை நிலையம்!

## நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சருக்கு கோரிக்கை

[மாவிட்டபுரம்)

பல லட்ச ரூபா செலவில் அமைக்கப்பட்டு பாழடைந்து போகும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ள தெல்லிப்பழை புற்று நோயாளர் சிகிச்சை நிலையத்தை முடிந்த அளவில் இயங்கச் செய்ய உடன் நடவடிக்கை எடுக்குமாறு தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை கமிட்டி சுகாதார அமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

மேற்படி கமிட்டியின் தலைவர் திரு ஈ சபாரத்தினம் சுகாதார அமைச்சர் டாக்டர் ரஞ்சித் அத்தபத்துவுக்கு அனுப்பிவைத்துள்ள அவசர வேண்டுகோள் ஒன்றில் இக்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இவ்வேண்டுகோளில் மேலும் தெரிவிப்பதாவது:

''வடபகுதி புற்று நோயாளர்கள் நீண்டகாலமாக எதிர்பார்த்திருந்த புற்றுநோய் சிகிச்சை நிலையம் அவர்களுக்கு உதவாமல் வீணே கிடந்து பழுடையும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதென்பதை மிக வருத்தத்துடன் தெரிவிக்க வேண்டியுள்ளது.

'தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை வளவில் பல லட்ச ரூபா செலவில் அமைக்கப்பட்ட இந்நிலையம் வடபகுதி புற்று நோயாளர்களுக்கு பெரிதும் வரப்பிரசாதமாக அமையுமென எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் திறப்பு விழா மட்டும் கோலாகலமாக நடந்ததே தவிர அந்நிலையம் இங்கவே இல்

அத்துடன் இந்நிலையத்திற்கென கொண்டு வரப்பட்டிருந்த 'கோபால்ட் யூனிற்'' இயந்திர சாதனங்களும் பின்னர் கழற்றப்பட்டு கொண்டு செல்லப்பட்டு விட்டன.

தற்போது மேற்படி சிகிச்சை நிலயம் வ கிடந்து தூசு படிந்தும் உலோக பொருட்களில் துருப்பிடித்தும் பாழடைந்து போகும் நிலைக்கு வந்துள்ளது. ஆகவே இச்சிகிச்சை நிலையம் குறித்து ஆராய்ந்து முடிந்த அளவில் அதனை இயங்கச் செய்ய ஆவன செய்ய வேண்டும்

'வடபகுதி புற்று நோயாளர்கள் இன்றுள்ள பதட்டமான சூழ்நிலையில் தென் பகுதிக்கு சென்று புற்று நோய்க்கு சிகிச்சை பெறுவது முடியாதிருப்பதால் அவர்களுக்கு ஓரளவு நிவாரணம் அளிக்கக்கூடிய வகையில் இந்நிலையத்தை இயங்கச் செய்யவும்'' என்று அவ் வேண்டு கோளில் கோரப்பட்டுள்ளது.

## பெண்ணின் பிடிவாதம் உயிரைப் பறித்தது

[மாவிட்டபுரம்]

வெளிநாட்டுக்குச் செல்லப் போவதாக பிடிவாதம்பிடித்த யுவதி ஒருவர் அது கைகூடாமையால் நஞ்சருந்தி உயிரைப் போக்கினார்.

அச்சுவேலியைச் சேர்ந்த துரைராஜா சூரியகுமாரி [27 வயது] என்பவரே இவ்வாறு மரணமானவராவார்.

இம்மரணம் குறித்து நடந்த மரண விசாரணையில் இறந்தவரின் தந்தை வேலுப்பிள்ளை துரைராஜா சாட்சியமளிக்கையில்: இறந்தவர் சிறுவயதிலிருந்தே பிடிவாத குணமுடையவரெனவும், கடந்த வருடம் தமது தங்கை நஞ்சருந்திமரணமானதாலும், தம்பியார் தமது விருப்பத்துக்குமாறாக திருமணம்செய்துகொண்டதாலும் கவலையுற்றிருந்தாரெனவும், வெளிநாடு செல்லப்போவதாக அவர் அடிக்கடி கூறிவந்தபோதும் அது கைகூடாமையால் கவலையுற்றிருந்ததாகவும். சம்பவதினம் தான் கோவிலுக்குச் சென்ற சமயம் பார்த்து வீட்டில் நஞ்சருந்தி மரணமானாரெனவும் கூறினார்.

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை வைத்திய அதிகாரி திரு. ஜெயமனோகரன் பிரேதபரிசோதனை நடத்தி சாட்சியமளித்தார்.

மரணவிசாரணை அதிகாரி திரு. நா. தம்பிராசா விசாரணை முடிவில் தற்கொலை என தீர்ப்பளித்தார்

கிராமசேவையாளர் திரு. சோமசுந்தரம் சாட்சிகளை ஆஜர்செய்தார்.

## விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

[பண்டத்தரிப்பு]

யாழ். பிரதேச சுகாதார சேவை பணிப்பாளர் பெரும்பாகப்பகுதியில் நிரந்தர சாதாரணத் தொழிலாளர்கள் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் தற்போது சுகாதார திணைக்களத்தில் சமயா சமய தொழிலாளர்களாகவும், சுத்திகரிப்பு தொழிலாளர்களாகவும் கடமையாற்றி வருபவர்களிடமிருந்து கோரப்பட்டுள்ளன.

18 வயதிற்கும் 40 வயதுக்கும் உட்பட்ட வயதுடையவர்களும், எட்டாம் வகுப்பு சித்தியடைந்திருப்பவர்களுமான மேற்படி சமயாசமய தொழிலாளர்களும் சுத்திகரிப்பு தொழிலாளர்களும் இப்பதவிக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள் விண்ணப்பங்கள் யாவும் இம்மாதம் 20ம் திகதிக்கு முன்னர் யாழ் பிரதேச சுகாதார சேவைப்பணிப்பாளர் அலுவலகத்திற்கு சம்பந்தப்பட்டநிறுவனத் தலைவர் ஊடாக அனுப்பிவைக்கப்பட வேண்டும் என்றும் தெருவிக்கப்பட்டுள்ளது.

## டிராக்டரை ஒப்படைக்குமாறு சுகாதாரக்குழு வேண்டுகோள்

[மாவிட்டபுரம்]

காங்கேசன்துறை உப அலுவலகத்திலிருந்து கொள்ளையடிக்கப்பட்ட டிராக்டரை திருப்பி ஒப்படைத்து சுகாதார சேவைகள், குடிநீர் விநியோகம் என்பனவற்றை தொடர்ந்தும் மேற்கொள்ள உதவுமாறு மயிலிட்டி ஊறணி சுகாதார குழு சம்பந்தப்பட்டவர்களிடம் கோரிக்கை விடுததுள்ளது.

மேற்படி குழுவின் கூட்டமொன்று மயிலிட்டி கண்ணகி படிப்பக மண்டபத்தில் திரு வி இரத்தினராசா தலைமையில் இவ்வாறு கோரிக்கை விடுக்கும் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது. கொள்ளையடுத்து குறிப்பாக கரையோரப்பகுதி மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அப்பகுதிகளில் குப்பை கூளங்கள் அகற்றப்படாமல் தேங்கி கிடப்பதால் மக்களின் சுகாதாரம் பாதிக்கப்படுகிறது. அத்துடன் குடிநீர் விநியோகமும் தடைப்பட்டுள்ளதால் கரையோரப்பகுதி மக்கள் குடிநீருக்காக அலைந்து திரிய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. ஆகவே இந்த டிராக்டரை திருப்பி ஒப்படைத்து இந்த சேவைகள் தொடர ஒத்துழைப்பு வழங்கும் படி மேற்படி கோரிக்கையில மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது

## முருகண்டி சம்பவ

(யாழ்ப்பாணம்)

முருகண்டியில் நேற்று முன் தினம் மாலை நடந்த துப்பாக்கி சூட்டுச் சம்பவத்தில் காயமடைந்த ஐவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தவயோகராசா [17 வயது] வி ஜெயசந்திரன் [39 வயது], எம். செல்வம் [46 வயது], எலிசபேத், தேவதாஸ் ஆகியோர் துப்பாக்கி சூட்டில் காயமடைந்தவர்களாகும். (க)


## 3-வது ஆண்டு நினைவஞ்சலி

**து. கனகசுந்தரம்**

பிறப்பு: 30 - 10 - 1915

இறப்பு: 9 - 5 - 1982

திதி: 16 - 4-85



தாங்கள் அமரத்துவம் அடைந்த இன்றைய தினத்தில் தங்கள் ஆத்மா இறைவன் நிழலில் சாந்தி பெற ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

19, பிரப்பங்குளம் வீதி,
யாழ்ப்பாணம்.

3174


## மீனவர் உணவு முத்திரை: தொடர்ந்து வழங்குமாறு கோரிக்கை

(மாவிட்டபுரம்)

கடல் கண்காணிப்பு வலயம் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள மீனவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள உணவு முத்திரையை நிறுத்தாமல்தொடர்ந்தும் வழங்குமாறு மயிலிட்டி பலாலி ஊறணி பகுதிகளுக்கான பிரஜைகள் குழு கோரிக்கை விடுத்துள்ளது.

கடல் கண்காணிப்பு வலயம் காரணமாக கரையோரப் பகுதி மீனவர்கள் தமது தொழிலை மேற்கொள்ள முடியாது கஷ்ட நிலைக்குத்தள்ளப்பட்டதால் அரசாங்கம் அவர்களுக்கு உணவு முத்திரைகளை வழங்கி வந்தது.

இந்த உணவு முத்திரைகள் மூன்று மாதங்களுக்கே வழங்கப்பட்டு இந்த மாதத்துடன் அம்முத்திரைகள் முடிவடைவதால் அவற்றை நிறுத்தாது தொடர்ந்தும் வழங்குமாறு மேற்படி பிரஜைகள் குழு செயலாளர் திரு வி. இரத்தினராசா சம்பந்தப்பட்டவர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்

உணவு முத்திரைகளால் கஷ்ட நிலையிலுள்ள மீனவ மக்கள் ஓரளவு நிவாரணம் பெற்றனரெனவும் அவை நிறுத்தப்பட்டால் அவர்கள் மேலும் கஷ்டத்திற்குள்ளாக நேரிடுமெனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

## இணக்க சபை

(மட்டுவில்)

சாவகச்சேரிப் பகுதியிலுள்ள கிராமிய மக்கள் சமாதானத்தை முன்வைத்து வட்டார ரீதியாக கல்விமான்களையும் பிரமுகர்களையும். கொண்ட இணக்க சபைகளை அங்குரார்ப்பணம் செய்துவருகிறார்கள்

இச்சபைகள் பண்டைக்கால பஞ்சாயத்து சபைகளின் அடிப்படையில், கிராமமக்கள் மத்தியில் ஏற்படும் சிறுசிறு சச்சரவுகளையும், பிணக்குகளையும் சமாதானமாகத் தீர்த்துவைக்கும் என்று தெரிவிக்கப்பட்டது

அண்மையில் சாவகச்சேரி நகரசபை 4ம் வட்டாரத்தில் திரு. வே. நடராஜாவைத் தலைவராகக் கொண்டு, திரு எஸ் தர்மலிங்கம் உபதலைவராகவும், திரு இ. பஞ்சாட்சரம் செயலாளராகவும், பொருளாளராகவும் கொண்ட இணக்க சபை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

## புதிய நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

சங்குவேலி கிராம அபிவிருத்தி சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் அண்மையில் சங்க மண்டபத்தில் நடைபெற்றது. கூட்டத்துக்கு வலி - தெற்கு உதவி அரசாங்க அதிபர் திரு ஏ சி செபநாயகம் தலைமை வகித்தார்

பின்வருவோர் நடப்பு வருட நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டனர் காப்பளர்கள் வலி - தெற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. ஏ சி செபநாயகம், திரு. த செல்லத்தம்பி, தலைவர் திரு. இ சதானந்தன் உபதலைவர்கள் திரு க பத்மநாதன் திரு க. நேசராசா, செயலாளர் திரு ந இராஜகுலசிங்கம் பொருளாளர் திரு இ. அமிர்தலிங்கம்

ஏழுபேர் கொண்ட நிர்வாக சபை உத்தியோகத்தர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.


## ஆறுவது மாத நினைவஞ்சலி



**தர்மலிங்கம் வர்ணகுலேந்திரன்**

மலர்வு: 5 9 1954 உதிர்வு: 9 11-1984

அன்புத் தெய்வமே ! இளைய நெஞ்சமே!
நீ மறைந்து மாசங்கள் ஆறுகிவிட்டாலும் உனமுகம்
என்றும் எம் நெஞ்சை விட்டு அகலாது

உன் நினைவால் வாடும்
பெற்றோர், அத்தான், சகோதரர்கள்.

'மலர் வாசம்',
சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.

3168

# பாஸிச ஆக்கிரமிப்பாளர்களை வென்ற 40வது ஆண்டு நிறைவு

இரண்டாவது உலக மகாயுத்தத்தில் கடைசி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டு இன்று 40 ஆண்டுகளாகின்றன. உலக சனத்தொகையில் 80 விகிதத்தைக் கொண்டிருந்த 61 நாடுகள் இந்த யுத்தத்தில் தொடர்புபட்டிருந்தன. இந் நாடுகளைச் சேர்ந்த பல்லாயிரம் குடும்பத்தினர் இன்றும்கூட யுத்தத்தினால் உயிரிழந்த தமது இன பந்துக்களையும் நண்பர்களையும் நினைவு கூர்ந்து துயரமடைகின்றனர் அத்துடன் ஹிரோசிமா நாகசாக்கியில் அணுக்குண்டுக்கு இலக்காகிய ஜப்பானியர்கள் தொடர்ச்சியாக இன்றும்கூட அதன் பாதிப்பினால் மடிந்து கொண்டேயிருக்கின்றனர்.

எனவே இந்த பாசிசத்திற்கெதிராக தேசபக்த யுத்த நினைவு கூறும்பொழுது எதிர்காலத்தில் இப்படியான ஒரு காட்டுமிராண்டித்தனமான யுத்தம் உலகத்தில் எந்த மண்ணிலும் உருவாகக் கூடாது என்ற மேலான நோக்கத்துடன் நினைவு கூறப்படவேண்டும்.

சோவியத் யூனியனில் 1945 மே மாதம் 9-ம் திகதி ஏற்பட்ட மாபெரும் தேசபக்த யுத்தத்தில் வெற்றி பாஸிசத்தின் மீதான வெற்றியானது ஓர் உலக வரலாற்றுப் பிரசித்திபெற்ற நிகழ்ச்சியாகும். இது உலகின் வளர்ச்சிப்போக்கில் வலுமிக்க செல்வாக்கைப் பெற்றுவிட்டது இந்த யுத்தத்தின்போதுதான் உலகின் முதலாவது சோஸலிச நாட்டின் தலைவிதியும் உலக நாகரீகத்தின் எதிர்காலமும், முன்னேற்றம் ஜனநாயகம் என்பனவும் தீர்மானிக்கப்பட்டன.

மனித வரலாற்றில் அதிக இரத்தப்பலிகளையும், கணக்கிலடங்கமுடியாத அழிவையும் உண்டாக்கிய யுத்தத்தில் ஜேர்மன் நாசிசம் ஜப்பானிய இராணுவவாதம் ஆகியவற்றிற்கு எதிரான போராட்டத்தின் தாக்கத்தை சோவியத் மக்களே பெருமளவு அனுபவித்தனர். சோவியத் மக்களின் தியாகங்கள் வீண்போகவில்லை அவை பாஸிசத்தைமுறியடிக்க வழிவகுத்தன. முதலாவது சோசலிச நாட்டின் ஜீவசக்தியையும் வல்லமையையும் நிரூபித்தது சோசலிச பொருளாதாரத்தின் மாக்ஸிச லெனினிச கருத்துக்களின் மாபெரும் வெற்றியாகும்.

—எஸ். விஜயானந்தன்—

சோசலிச கருத்துக்களுக்கும் மாக்ஸிச லெனினிச சித்தாந்தத்திற்கும் வளர்ந்து வரும் ஆதரவு ஏகாதிபத்தியத்தின் அபிவிருத்திக்கு வழிவகுக்கும் என அச்சம் கொண்டிருந்தனர். இவ்வளர்ச்சிப் போக்கை தடை செய்யும் நோக்கம் கிட்லரின் மனதில் மேலோங்கிநின்றது. 1939 ம் ஆண்டிற்கு முன்பு சோவியத் யூனியனும், மங்கோலிய சோசலிசக் குடியரசு ஆகிய இரண்டுமே சோசலிச நாடுகளாக திகழ்ந்தன. இப்பொழுது 14 சோசலிசநாடுகள் உண்டு. ஏகாதிபத்திய நுகத்தடியிலிருந்து பல நாடுகள் விடுதலை பெற்றுசோசலிச திசை நோக்கி வீறு நடைபோட்டுக் கொண்டிருக்கின்றன.

உலகின் முதலாவது சோசலிச நாட்டின் தோற்றம் இருசமுக அமைப்புக்களாக பிரிந்தன சர்வாதிகாரி கிட்லரின் [illegible]யான நாஸி ஜேர்மனி சோவியத் யூனியனையும் அதன மூலவளங்களைக்கைப்பற்றுவதிலும் மாத்திரமல்லாமல் அந் நாட்டை அழித்தொழிப்பதன் மூலம் தங்கள் இராணுவத்திட்டங்களை அமுலாக்க ஆர்வம் கொண்டிருந்தது. பிரிட்டிஷ் பிரான்ஸ் அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்கள் பிறிதொரு சக்தியைப் பாவித்து சோசலிச நாட்டை அழிக்கத் திட்டமிட்டன. ஆனால் அவர்களின் திட்டங்கள் எல்லாமே பகற்கனவாக முடிந்து விட்டன. பிரிட்டனும் பிரான்சும் வெகு விரைவில் ஜேர்மனியின் ஆக்கிரமிப்பிற்குள்ளாயின அமெரிக்கா, பிரான்ஸ், பிரிட்டனில் பரந்த அடிப்படையில் பாஸிச எதிர்ப்பு இயக்கங்கள் வெகு வேகமாக வளர்ந்து நேசநாடுகளின் கூட்டணியாக உருப்பெற்று நாஸிசத்திற்கெதிராக உக்கிரமமான யுத்தத்தில் ஈடுபட வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியது. இதுவே கிட்லர் எதிர்ப்புக் கூட்டணியாக உருப்பெற்று இரண்டாவது உலக மகாயுத்தத்தை முறியடிக்க முடிந்தது.

சமீபகாலங்களில் உலக சமாதானத்திற்கு பல கோணங்களிலிருந்தும் அச்சுறுத்தல்கள் வந்து கொண்டிருக்கின்றன அதேநேரத்தில் உண்மையான அணு ஆயுதப் போராளியின் மார்க்கத்தை தடைசெய்யும் உலக மக்களின் பலுமிக்க இயக்கங்களும் பிரவலடைந்து பலம் பெற்று வருகின்றன தேசபக்தயுத்தத்தின் வெற்றியை கொண்டாடும் இவ்வேளையில் எதிர் காலத்தில் எந்தப் பகுதியிலும் யுத்தம் நடைபெறக்கூடாது உலகத்தில் சமாதானம் நிலைநாட்டப்பட வேண்டும் என்ற பெருநோக்குடன் இந்நாள் நினைவு கூரப்பட வேண்டும்.

## யாழ்பல்கலைக் கழகத்தின் ஆய்வு

# விஞ்ஞான பட்டதாரிகளிடம் விபரம் கோரப்படுகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டு இவ்வாண்டு அக்டோபர் மாதத்துடன் பத்தாண்டுகள் பூர்த்தி ஆகின்றன. இதனையொட்டி பல்கலைக் கழகத்தின் ஆக்கபூர்வ வளர்ச்சிகள் பற்றி இப்போ ஆராயப்பட்டு வருகிறது.

1975-1985-ம் ஆண்டுகளுக்கு இடையில் யாழ். பல்கலைக் கழக விஞ்ஞான பீடத்தில் கல்வி பயின்ற ஒவ்வொருவரினதும் தனித்தனி விபரங்களை ஒரு "கேள்விக்கொத்து" மூலம் சேகரிக்கப்படுகிறது. தேசிய மட்டத்தில் சமூக பொருளாதார வளர்ச்சிக்கு இவர்கள் ஆற்றும்பணி கணக்கிடப்பட இருக்கிறது. முகவரி தெரிந்த எல்லா மாணவர்களுக்கும் இது அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கேள்விக்கொத்தைப் பெற்றுக்கொள்ள பழைய மாணவர்கள், தலைவர், விலங்கியற் திணைக்களம். பல்கலைக் கழகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளும்படி வேண்டப்படுகின்றனர்.

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

மாவிட்டபுரம் கொலலங்கலட்டி வீரகத்திப் பிள்ளையார் கோவில் மஹோற்சவம் இம் மாதம் 25ம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

ஆனி மாதம் 2ம் திகதி தேர் உற்சவமும் 3ம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

## ரூபவாஹினி

மாலை

| | |
|---|---|
| 5-00 | செய்திகள் |
| 5-05 | சிறுவர் நிகழ்ச்சி |
| 5-10 | காட்டூன் சித்திரம் |
| 5-30 | நிகழ்ச்சித்தொடர் |
| 6-00 | சிங்கள நிகழ்ச்சி |
| 6-30 | செய்திகள் [தமிழ்] |
| 9.55 | செக்கோ சிலவாக்கிய சுதந்திரதின செய்தி |
| 7-25 | இலங்கை பற்றிய நிகழ்ச்சி |
| 8-00 | செய்திகள் [சிங்களம்] |
| 8-25 | நாடகம் |
| 9-00 | செய்திகள் [ஆங்கிலம்] |
| 9-20 | சங்கீத நிகழ்ச்சி |
| 9-50 | உள்ளூர் கலை நிகழ்ச்சி |
| 10-20 | ஒளிபரப்பு முடிவு. |

லங்கெம் விவசாய இரசாயனங்கள் நீண்ட காலமாக விலைக்கும், செயற்திறனுக்கும் முதலிடம் பெற்றவை.

அவை இலங்கை விவசாயிகள் அபரிமித அறுவடை பெற உதவுகின்றன. சமீபகாலமாக பெருகிவரும் இரசாயனத் தயாரிப்புகளிலிருந்து எமது தயாரிப்புகளை இனங் காண்பது இலகுவாகவேண்டும் என நாம் கருதுகிறோம். எனவேதான் எமது தயாரிப்புகளின் செயற்பாட்டுத்திறன் போலவே அவற்றின் லேபில்களும் தனித்துவமாகத் திகழ வேண்டுமென எண்ணி தனித்துவ தோற்றம் வழங்கியுள்ளோம். சரியான நேரத்தில் எடுக்கப்பட்ட சரியான முடிவு இது! ஏனெனில் இப்போது லங்கெம் 100% இலங்கையருக்கே உரித்தான பொதுக் கம்பனியாகியிருக்கிறது. ஆம், அது உங்கள் கம்பனி!

லங்கெம் விவசாய இரசாயனங்களின் சில பெயர்களும், சகல லேபிள்களும் மாற்றப்பட்டுப் புதுத்தோற்றம் பெற்றுள்ள போதிலும் தரத்தில் மாற்றமேதுமில்லை!

| புதிய பெயர் | பழையபெயர் | புதிய பெயர் | பழைய பெயர் |
|---|---|---|---|
| டியல்றின் 20. | டியல்ட்ரெக்ஸ் 20 | கொலர் புரடெக்டன்ட் | ஷெல் கொலர் புரடெக்டன்ட் |
| அல்ட்ரின் 20. | அல்ட்ரெக்ஸ் 25 | TB 192 பனல் டிரெஸ்ஸிங் | ஷெல் TB 192 |
| மொனோகுரோட்டபொஸ்60% | அசோட்ரின் 60 | லங்கெம் DD | ஷெல் DD |
| மெதாமிடோபொஸ் 60 | மெதாமிடோ பொஸ் LC 60% | செர்பக்டன்ட் N | அக்ரிகல்சர் சேர்பக்டன்ட் N |
| லங்கெம் M-50 | களைநாசினி M 50 | லங்கெம் ப்ளவரிங் ஹார்மோன் | ஷெல்ஸ்டோன் P |
| லங்கெம் பரகுவாட் | பரகுவாட் | லங்கெம் சல்பர் | டிஸ்பேர்சிபிள் சல்பர் |
| லங்கெம் சினெப் | சினெப் | | |

LANKEM லங்கெம்

நாடெங்குமுள்ள லங்கெம் வியாபாரிகளிடம் விரைவில் கிடைக்கும்.

# லங்கெம், புதுத்தோற்றம்.




விலை ரூ. 19.50 முதல்.

லங்கெம். விவசாயிகளின் தோழன். லங்கெம் சிலோன் லிமிட்டெட் 760, 762 பேஸ்லைன் வீதி, கொழும்பு 9. தொலைபேசி: 598292-6

HTL LK 1595

தொடரும் கொள்ளையின் எதிரொலி:

# 175 குடும்பம் நடுத்தெருவில் நிற்கப்போகிறது!

[யாழ்ப்பாணம்]

''சில சக்திகள் மீண்டும் மீண்டும் எமது ஸ்தாபனத்தில் கொள்ளையடித்து வந்துள்ளன. எமது ஸ்தாபனத்தை அழித்துவிடுவதனல் இவர்களுக்கு என்ன லாபம் கிடைத்துவிடப்போகிறதோ தெரியவில்லை. மாறுக 175 குடும்பங்கள் நடுத்தெருவில் நிற்கப் போவது மட்டும் நிச்சயம்''

யாழ் ஐக்கிய வியாபாரச் சங்க ஊழியர் நேற்று வெளியிட்டுள்ள துண்டுப்பிரசுரத்தில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## துண்டுப்பிரசுரத்தில் கண்டனம்

அத் துண்டுப் பிரசுரத்தில் மேலும் கூறப் ட்டிருப்பதாவது:-

''யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபாரச் சங்கம் அதன் அறுபத்தைந்து வருடங்களுக்கு மேற்பட்ட காலசேவையில் கடந்த ஒருவருட காலத்தில் பலவித நெருக்கடிகளை எதிர்நோக்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது. சென்ற ஆண்டு மார்ச் மாதத்தில் கொள்ளைமுயற்சி ஒன்றின்போது உதவிப் பொது முகாமையாளர் கொள்ளைக் கோஷ்டியால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

பின்னர் ஏப்ரல் 9-ந் திகதி சட்டத்தைக் காப்பாற்றப் புறப்பட்டவர்களால் பிரதான கட்டடம் தீயிடப்பட்டது. காப்புறுதி மறுக்கப்பட்ட நிலையிலும் மிகுந்த நெருக்கடியின் மத்தியிலும் இந்த ஸ்தாபனம் சுமார் 175 ஊழியர்களுக்கு வாழ்வளிக்கும் முக்கிய நோக்குடன் செயற்பட்டு வந்துள்ளது.

''வடபகுதியில் நீண்ட சரித்திரத்தையுடைய 1,300 சிறுபங்காளரைக் கொண்ட கம்பெனியாக எமது ஸ்தாபனம் திகழ்வது சிலருக்குப் பிடிக்கவில்லைப் போலும். எமது கம்பெனி வடபகுதி மக்களுக்குத்தான் சேவை செய்கிறது என்பதைச் சிலர் புரிந்து கொள்ளாதது கவலைக்குரியதே. எந்தக் கஷ்டமான சூழ்நிலைகளிலும் நியாயமான விலையில், முடிந்தவரை சீரான விநியோகம் செய்து வந்துள்ளதில் எமது ஸ்தாபனம் பெருமையடைகிறது.

''எமது ஸ்தாபனத்தை அழிப்பதால் பலன் அடையப் போவது யார்? எமது சமூகத்திற்கு உடனடியாகவோ அல்லது நீண்ட நோக்கிலோ நன்மை கிடைக்குமா? எம்மைப் போன்ற ஸ்தாபனங்கள் மூடப்படுவதால் ஏற்கனவே புறக்கணிப்புக்குள்ளான எமது சமூகத்தின் பிரச்னை மேலும் மோசமடையாதா?

''பல்வேறு பிரச்னைகள் மத்தியிலும் செயற்பட்டு இந்தப் பகுதியில் பிறந்து ஏதோ வாழ்ந்து கொண்டிருக்கும் 175 குடும்பங்களை வாழவிடுமாறு யாழ். ஐக்கிய வியாபாரச் சங்க ஊழியர்கள் இறுதியாகச் சகல நலன் விரும்பிகளையும் கேட்டுக் கொள்கின்றனர். (க)


ஹரன் சினிமா
தினசரி 10-30 — 2-30
250 நாட்களுக்குமேல் காட்சியளித்த வெற்றிச் சித்திரம்
மோகன் - பூர்ணிமா
விதி
(கலர்)

ராஜா தியேட்டர்
யாழ்ப்பாணம்
தினசரி 10-30, 2-00
கமலஹாசன்- ஜெயபிரதா மஞ்சுபார்கவி
சலங்கை ஒலி
(ஈஸ்ட்மன் கலர்)
1984ம் ஆண்டின் மிகச்சிறந்த படம்

ரீகல்
தினசரி 10-30, 2-00
பாண்டியன், ரேவதி நடித்த
பாரதிராஜாவின்
புதுமைப் பெண்

ரீகல் மினி
10-30, 2-00 மட்டும்
CRVEL PASSION
(மிகக் கண்டிப்பாக வயதுவந்தவர்களுக்கு மட்டும்)

லிடோ சினிமா
"You dont Assign; You Unleash Him"
Staring
Kenwahl-Alberta Watson
in
"THE SOLDIER"

வெலிங்டன்
(யாழ். நகர்)
10-30, 2.30
ரஜனிகாந்த் - மாதவி நடித்த
தில்லு முல்லு
(ஈஸ்மன் கலர்)

வின்ஸர்
தினசரி 10-30, 2-00
4-15
Burt Reynolds
in
BEST FRIENDS
காதலர் இருவர் வாழ்க்கை மர்மத்தைச் சித்தரிக்கும் ஓவியம்.

யாழ் வின்ஸர் மினி
தினசரி: 10-30, 2-30
7 — 9
ரஜனி, ராதா, பாலாஜி, ஜெய்சங்கர் நடித்த
இரும்புக் கை

லதா மினி
(கோண்டாவில்)
தினசரி 10-30, 2-00, 4-00
I SPIT ON YOUR GRAVE
(வயது வந்தவர்களுக்கு மட்டும்)

ரான்லி மினி
(சினிமா)
10-30, 2-30,
ரஜனிகாந், ராதா, V. K. ராமசாமி நடித்த
நான் மகான் அல்ல
(கலர்)
5'X5' திரையில்

ஆனந்தி
வீடியோ சினிமா
[மனேகராவில்]
10-30 காட்சி மட்டும்
ரகு, ராணி நடித்த
குயிலே குயிலே

S. T. L. மினிசினிமா
(திருநெல்வேலி)
மு. ப. 10-30 பி. ப. 2-00
ரவீந்தர், சரிதா, அசோக், பாலச்சந்திரன் நடித்த
கல்யாண அகதிகள்
(இந்தியாவில் வெற்றி முரசு கொட்டி ஓடிக்கொண்டிருக்கின்றது)
4-30 P. M.
EAGLE ATTACK AT TOWN

மொடேர்ன் மினி சினிமா
(ஸ்ரீலங்கா அச்சக லேன் ராஜா தியேட்டருக்கு அருகாமையில்
8-5-85 முதல்
Big jim Brown Landau, Martin
திரம்பட நடித்த
"Black Gunn"
மயிர்க் கூச்செறியும் விறுவிறுப்பான சண்டைக் காட்சிகள் நிறைந்தது
ஒறிஜினல் படப்பிரதியில் மிகத்தெளிவாகக் காண்பிக்கப்படுகிறது
தினசரி 3 காட்சிகள்


## ஓய்வு பெற்றார்



(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு இந்து கல்லூரி கனிஷ்ட பிரிவு அதிபர் திரு. எஸ். எஸ். பொன்னம்பலம் 35 வருட ஆசிரிய சேவையின் பின்னர் ஓய்வு பெற்றுள்ளார்.

தலவாக்கெலை அரசினர் சிரேஷ்ட பாடசாலையில் 1949ம் ஆண்டு ஆசிரியராக நியமனம் பெற்ற இவர் கொழும்பு கொட்டாஞ்சேனை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி ஆகியவற்றில் சேவையாற்றிய பின்பு பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியில் கனிஷ்ட பிரிவு அதிபராக 1971-ம் ஆண்டில் நியமனம் பெற்றார். வட்டுக்கோட்டை கல்வி வட்டார பாடசாலை அதிபர்கள் சங்க செயலாளராகவும் பல ஆண்டுகள் பணிபுரிந்த திரு பொன்னம்பலம் பண்ணாகம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவராகவும், பண்ணாகம் ஐக்கிய நாணய சங்கத்தின் தலைவராகவும், வலி மேற்கு வெகுஜன இயக்கத்தின் பொருளாளராகவும் பணியாற்றி வருகின்றார். பண்ணாகத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் ஒரு சிறந்த சமூக சேவையாளருமாவர்.

## களுவாஞ்சிக்குடி சம்பவம்

[மட்டக்களப்பு]

களுவாஞ்சிக்குடியில் ஜீப் ஒன்றை கடத்தி வந்த இருவரை பாதுகாப்புப் படையினர் சுற்றிவளைத்த பொழுது ஒருவர் 'சயனைட்' பாவித்து மரணமானதாகவும் மற்றவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

## உரும்பராயில்

[யாழ்ப்பாணம்]

உரும்பராய் பகுதியில் நேற்றுக் காலை முதல் பலத்த சோதனை நடைபெற்றது. வாகனங்கள் நிறுத்தப்பட்டு சோதனையிடப்பட்டது. (க)

# பகிரங்க பிஸ்கால் ஏல விற்பனை

1. அசைப்பிள்ளை அழகக்கோன் திருநெல்வேலி தற்போது இல: 100, இராசவீதி, மாத்தளை.

வழக்காளி

வழ. இல: பிரிவிடுதல்/1139.

எதிர்

1. சட்டநாதர் சண்முகநாதனும்,
2. பெண் சிவபாக்கியமும், 52ம் மைல் போஸ்ட், கண்டி வீதி, கிளிநொச்சி.
3. முருகேசு ஆறுமுகமும் (இறந்து விட்டார்)
4. சின்னத்தம்பி கைம்பெண் ரேபியும் பண்டாரக்குளம் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
5. கந்தையா சோமசுந்தரக் குருக்கள், மைலிட்டி தெற்கு, தற்சமயம் கிராம்புவில் சாவகச்சேரி.
6. கந்தையா குணரத்தினக்குருக்கள், மைலிட்டி தெற்கு தெல்லிப்பழை.
7. கந்தையா இராசையாக்குருக்கள், மந்திகை அம்மன் கோவில், சாவகச்சேரி.
8. சோமசுந்தரக்குருக்கள், சிவசிதம்பரக் குருக்களும்
9. பெண் பொம்மா லெட்சுமியும் புலோலி மேற்கு, பருத்தித்துறை.

எதிராளிகள்.

10. பொன்னம்பலம் தர்மரத்தினம், இல: 367, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் (1-ம், 2-ம், 5 - 9-ம் எதிராளிகளுக்காக சேர்க்கப்பட்ட எதிராளி)

இறந்த 3-ம் எதிராளியின் இடத்திற்கு சேர்க்கப்பட்டவர்கள்.

3. (அ) முருகேசு ஆறுமுகம் கைம்பெண் சிவக்கொழுந்துவும்
(ஆ) செல்வி ஞானதேவி ஆறுமுகமும்,
(இ) செல்வி ஞானசோதி ஆறுமுகமும்,
(ஈ) ஆறுமுகம் சத்தியலோகனும் இல: 5, பண்டாரகுளம் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

1973-ம் ஆண்டு பங்குனி மாதம் 14-ம் திகதி மேற் கூறப்பட்ட வழக்கில் இந் நீதிமன்றம் வழங்கிய பிரிவிடல் வழக்கிடைத் தீர்வையின் பிரகாரம் வழக்காளியும் 2ம், 6ம், 7ம், 9ம் எதிராளிகள் ஆகியோரும் குறித்த விதிப்பின் அட்டவணையிலுள்ள ஆதனத்திற்கு அவ்விதிப்பில் கூறப்பட்ட பங்கு வீதத்தில் திறத்தோர் ஒவ்வொருவரும் உரித்துடையவரெனப் பிரகடனம் செய்யப்பட்டுள்ளதாலும் 1977ம் ஆண்டில் இயற்றப்பட்ட 21ம் இலக்கப் பிரிவிடல் சட்டத்தின் 27ம் பிரிவின் கீழ் குறித்த விதிப்பின் அட்டவணையில் விபரிக்கப்பட்ட ஆதனத்தை பகிரங்க ஏல விற்பனை செய்யவேண்டுமென்றும் விற்பனவால் வரும் தொகையை இவ் வழக்கில் வைப்புச் செய்யவேண்டுமென்றும் கட்டளை வழங்கியிருப்பதாலும்,

இந்நீதிமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட கட்டுப்பாடுகளுக்கமைவாகவும் எனக்களிக்கப்பட்ட விற்பனவு அதிகாரத்திற்கமைவாகவும் இவ்விற்பனையை நடாத்த யாழ்ப்பாணம் மாவட்ட பிஸ்காலாகிய குமாரவேலு குலசிங்கம் ஆகிய என்னை இந்நீதிமன்றம் நியமித்துள்ளதாலும் இதன் கீழுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டதுமான முழு ஆதனத்தையும் குறிப்பிட்ட ஆதனத்தில் நின்று பகிரங்க ஏலத்தில் 1985ம் ஆண்டு ஆனி மாதம் 6ம் திகதி வியாழக்கிழமை காலை 11-00மணிக்கு விற்பனவு செய்யப்படுமென இத்தால் அறியத்தருகிறேன்.

## ஆதனத்தின் அட்டவணை

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டமும் பகுதியும் நல்லூர் பற்று நல்லூர் இறையில் இருக்கும் ஆதனமாகிய 'மரப்புலி வளவு' நில அளவையாளர் சி. சி. குமாரசாமி அவர்களால் 1971ம் ஆண்டு ஆவணி மாதம் 30-ம் திகதி 877ம் இலக்கத்தில் தயாரித்த படத்தின்படி நிலப்பரப்பு ஏழும் (7) குளிகள் பதினறு தசம் ஒன்றும் (16.1 இவ்வாதனத்திலிருக்கும் வீடுகள், குடிசைகளும், கிணறும் பயிர்களும் இதனடங்கலும். எல்லை: கிழக்கு பொன்னம்பலம் பெண் பவளத்திற்குரிய ஆதனம், வடக்கு வேலு அப்புக்குட்டிக்குரிய ஆதனம், மேற்கு வைத்திலிங்கம் கந்தையாவுக்குரிய ஆதனம், தெற்கு பண்டாரகுளம் வீதி

வாங்கற்காரன் பின்வரும் செலவுகளையும் வாங்கற் தொகைக்கு மேலதிகமாகக் கட்டவேண்டும்.

(1) அரச இறை (பவுண்டேஜ்) ஒவ்வொரு ரூ. 5/-க்கும் 10 சதவீதமாகவும்.
(2) பிஸ்கால் செலவு சிவில் நடைமுறைக் கோவையில் 258ம் பிரிவிற்கமைவாகவும்,
(3) விளம்பரச் செலவுகளும்,
(4) விற்பனவு சம்பந்தமான போக்குவரத்துச் செலவும்,
(5) விற்பனவு கமிஷன் அங்கீகரிக்கப்பட்டகட்டுப்பாடுகளுக்கமைவாகவும்,
(6) விற்பனை ஒப்பந்தக்கட்டணமும் (நொத்தாரிஸ் தயாரித்த பட்டியலின்படி) அறவிடப்படும்.

நீதிமன்ற ஆணைப்படி

**கு. குலசிங்கம்,**

பதிவாளரும்/பிஸ்காலும்.

1985-ம் ஆண்டு வைகாசி மாதம் 7ந் திகதி.
மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.

[3171]

## பஸ்ஸிலிருந்த நபர்கள்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

முறிகண்டி துப்பாக்கிச் சூட்டுச்சம்பவத்தில் காயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ள மினிவான் சாரதி பற்றிக் குணம் (34 வயது) மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ். ஆஸ்பத்திரியின் ஒரு வாட்டில் காயமடைந்த மூவர் அனுமதிக்கப் பட்டிருந்தனர், உறவினர்கள் அயலவர்கள், அங்கு சூழ்மியிருந்தனர்.

சாரதி குணம் தொடர்ந்து தெரிவித்ததாவது "வெடிச் சத்தம் கேட்டதும் விழுந்தடித்துக்கொண்டு ஓடினேம். 'ஐயோ, அம்மா' என்ற அவலக்குரல்களும் கேட்டது அந்த மடத்தில் பிச்சைக்காரர்கள், சாமியார்கள், வயோதிபர்கள் ஆகியோர்கள் படுத்திருந்தனர், அவர்களும் எழுந்து ஓடிவந்தனரா என்பதைக் கவனிக்கவில்லை.

"எத்தனைபேர் பலியானுர்கள் என்பதைகவனிக்கமுடியவில்லை. எங்கும் பதற்றமாக இருந்தது அந்தப்பெரிய தனியார் பஸ், திரும்பி மாங்குளப் பக்கம் சென்று பின்னர் மீண்டும்வந்தது அப்போது அதில் பிரயாணிகள் வந்தனர். பத்தைக்குள் மறைந்திருந்த என்னை ஒருவர் அணைத்தபடி கூட்டிவந்து அந்தபஸ்ஸில் ஏற்றி கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைத்தார்"

கிளினர் எம். பாலன்; துப்பாக்கி வெடிச்சத்தம் கேட்டபோது தான் சனத்திற்குள் ஓடிமறைந்து தப்பிவிட்டதாக தெரிவித்தார்.

அச்சமயம் அங்கு சில லொறிகளும் கார் ஒன்றும் நின்றதாகவும் அவர் கூறினர்.

### மற்றொரு கட்டிலில்

அரைக் கால்சட்டை அணிந்த சிறுவன் காயங்களுடன் படுத்திருந்தான். பெயர் செல்வம், வயது 12, இடம் முருகண்டி. இச்சம்பவத்தில் இச்சிறுவனும் காயமடைந்திருந்தான் அவனல் பேசமுடிய முடியவில்லை மயக்கம் தெளியவில்லை. அருகில் உறவினர் இல்லை.

இதே வாரீட்டில் தவயோகராசா [14] வயது என்ற சிறுவனும் முதுகில் காயத்துடன் கிடந்தான். முருகண்டிச் சம்பவம் நடந்து 2 மணிநேரத்தின்பின் கிளிநொச்சியில் வாகனத்தில் வந்தவர்கள் சுட்டபோது கிளிநொச்சி சந்தைக்கு வாழைக்குலை விற்க தாயுடன் சென்று திரும்பிய இச் சிறுவன் காயமடைந்தான்;

குருநகரைச் சேர்ந்த ஒரு குடும்பம்; மகளை வெளிநாடு அனுப்ப கடந்தமாதம் 28ந் திகதி காரில் கொழும்பு சென்றிருந்தது. வெளிநாடு அனுப்பியபின் அவர்கள் யாழ் நகர் திரும்பும் வழியில் முருகண்டியில் சிறிது ஓய்வு எடுத்தனர். அப்போது அக்காரில் இருந்த 15 வயதான எலிஸபெத் துப்பாக்கி சூட்டினல் பலத்த காயமடைந்தார். காரிலிருந்த தேவதாஸும் தலையில் காயமடைந்தார். காரில் 7 பேர்வந்தனர்.

எலிஸ பெத்துக்கு இன்னும் மயக்கம் தெளியவில்லை. அருகில் நின்ற தாயார் திருமதி ஹெலன் தான் அக்காரில் வந்தபோது வெடிச்சத்தம் கேட்டதும், எல்லோரும் காரில் பதுங்கி கொண்டதாகவும் மகள் காயமடைந்ததாகவும் கூறினர்:

"துப்பாக்கியுடன் வந்த இருவர் காரைத்தாக்கியபோது 'ஐயா நாங்கள் மகளை வெளிநாட்டுக்கு அனுப்பிவிட்டு கொழும்பிலிருந்து வருகிறேம், மகளும் காயமடைந்துள்ளார். எங்களை விட்டுவிடுங்கள் என்றதும் அவர்கள் காரிலுள்ளவர்களுக்கு சுடவேண்டாம் என்று கூறிவிட்டு சென்றதாக தேவதாஸ் தெரிவித்தார்.

இதன்பின்னரும் வேறுபக்கத்தில் சூடுகேட்டதாகவும் ஆனல் கார் நின்றஇடத்திற்கு எவரும்வரவில்லை என்றும், அவர் கூறினர்.

இரவு 7 மணிக்கு யாழ்ப்பாணம் வந்தடைந்ததாகவும், ஊரடங்கு நேரமாதலால், ஆஸ்பத்திரிக்கு செல்லாமல் நேரே வீட்டிற்குச் சென்று நேற்றுக்காலை ஆஸ்பத்திரிக்கு வந்ததாகவும், தேவதாஸ் கூறினர். (க)

# மரண அறிவித்தல்

## சபாபதி சிவசம்பு

சங்கானையைப் பிறப்பிடமாகக்கொண்ட சபாபதி சிவசம்பு 7-05-85 அன்று காலமாகிவிட்டார். இவர் மனோரஞ்சிதத்தின் அன்புக்கணவரும், சரோஜினிதேவி (மேற்கு ஜெர்மனி), இரத்தினசபாபதி (சவுதிஅரேபியா), செல்வரட்ணம் (மேற்கு ஜெர்மனி), யோகேஸ்வரி, மகேஸ்வரன் (மேற்கு ஜெர்மனி), சிவமலர், சுலாவதி, விக்னேஸ்வரன், சுபாஜினிதேவி ஆகியோரின் தந்தையும் ஆவர் அன்னாரின் ஈமக்கிரியைகள் 8-05-85ல் நடைபெற்றது. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

இப்படிக்கு

3183 அன்பு மனைவி, பிள்ளைகள்

# மரண அறிவித்தல்

## சின்னத்தம்பி ஐயாத்துரை

கோண்டாவிலைச் சேர்ந்த இளைப்பாறிய லக்சபான தோட்ட கண்டக்டர் சின்னத்தம்பி ஐயாத்துரை காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற பொன்னம்மாவின் அன்புக்கணவரும், சிவனேசன் (இஸ்டோக்கோம், சாமிமலை), சுந்தரலிங்கம் (ஜேர்மனி), விஜயலக்ஷ்மி, தில்லைநாதன் (மாப்பியன் மில்), யோகேஸ்வரன் (சுவிஸ்லாந்து) ஆகியோரின் அன்புத்தந்தையும், சரோஜினிதேவி, நளாயினி, கதிர்காமராசா (பண்ணை வைத்தியசாலை), மகாராணி ஆகியோரின் அன்பு மாமனாரும், பாஸ்கரன், பிரபாகரன், கோபிரேசன், ராஜன், ராஜி, சுதர்சன், ஜெஸ்மின், சபீஸ், திலேஸ், லதீஸ் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் கோண்டாவில் காரைக்கால் மயானத்தில் 9-5-85 வியாழக்கிழமை (இன்று) காலை 10 மணியில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் யாபேரும் இத்தகவலை ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

மிஷன் பாடசாலை வீதி, கோண்டாவில். 3189

## சுவரொட்டி மூலம் அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

காரைநகர் கடற்படை முகாம் தாக்குதல் சம்பவத்தின்போது மரணமடைந்த தமது சகதோழர்களுக்கு அஞ்சலி செலுத்தி ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின், (ஈ. பி. ஆர். எல். எவ்.) சுவரொட்டிகள் யாழ். குடாநாடெங்கும் காணப்பட்டன.

கப்ரன் செல்வராஜி திருமலை (வயது 38; கப்ரன் சுநகரலிங்கம் மட்டக்களப்பு; லெப்டினன்ட் விஜயகுமார் மட்டக்களப்பு, 2வது லெப்டினன்ட் விஜயகுமார் யாழ்ப்பாணம்; மற்றும்மக்கள் விடுதலைப்படையின் முன்னனித்தோழர்கள் தவராஜா காரைநகர்; வதனி (சோபா) யாழ்ப்பாணம் ஆகியவிபரங்கள் அச்சுவரொட்டியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

முகாமின் கட்டிடசேதம் பற்றியும் சுவரொட்டியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மா)

## சிலாபம் கொள்ளை முக்கியநபர் கைதானுர்

[புத்தளம்]

சிலாபம் பகுதியில் அண்மையில் தனியார் பஸ் ஒன்று எரிக்கப்பட்டு, பிரயாணிகளின் உடமைகள் கொள்ளையடிக்கப்பட்டது தொடர்பாக பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து முக்கிய நபர் ஒருவரைக் கைதுசெய்துள்ளனர்.

இவரிடமிருந்து பல பொருள்களும் மீட்கப்பட்டுள்ளன.

## முருகண்டிச் சம்பவம் பலர் காயம்

[கிளிநொச்சி]

நேற்றுமுன்தினம் திடீரென தனியார் பஸ் ஒன்றில் முருகண்டிக்கு வந்திறங்கியோர் நடத்திய துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் ஸ்தலத்திலே பலியானுர். சுமார் 10 பேர் படுகாயம் அடைந்தனர். முருகண்டிப் பிள்ளையார் கோவிலைச் சுற்றிய பகுதிகளில் பெரும் பதற்றம் நிலவியது.

பிள்ளையாரை வணங்கிவிட்டு மடத்தில் தங்கிஇருந்த ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் படுகாயம் அடைந்தனர். பல கடைகள் அடித்து நொருக்கப்பட்டன. கடைச்சிப்பந்திகள் மூவரும் படுகாயம் அடைந்தனர். ஒரு கடையின் உரிமையாளரான இரு சகோதரர்களும் படுகாயம் அடைந்தனர்.

கோவிலில் வழக்கமாக தேங்காய் பொறுக்கிப்போடும் நபர் ஒருவர் ஸ்தலத்திலேயே பலியானுர்.

அன்று காலை இனந்தெரியாதவர்களினல், 3 வான் கடத்தப்பட்டதாகவும், இதில் ஒன்று சிங்களவருடையவான் என்றும் அவர் இதுபற்றி பொலிஸில் புகார் செய்திருந்ததாகவும் கூறப்படுகிறது.

கடத்தப்பட்டவான் முருகண்டியிலிருப்பதாக கிடைத்த தகவலைத் தொடர்ந்து வவனியாவிலிருந்து வந்த தனியார் பஸ்ஸில் ஏறியவர்கள் முருகண்டிக்குச் சென்றதாகவும். அவர்கள் சீருடை அணிந்திருந்ததாகவும் கூறப்படுகிறது.

நிலைமை இவ்வாறிருக்க கிளிநொச்சி லக்சபான மின்சார நிலையத்தடியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் கனகாம்பிகைகுளத்தைச் சேர்ந்த எஸ். தவயோகராசா [17 வயது] படுகாயம் அடைந்தார்.

## வடமராட்சி...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

தெரிந்ததே.

நேற்றைய சம்பவத்தினல் இப்பகுதியில் போக்குவரத்து சேவைகள் நடைபெறவில்லை. வீதிகளில் சன நடமாட்டமும் காணப்படவில்லை. (மா)

## வர்த்தக சங்கம் இன்று கூடுகிறது

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் வர்த்தக சங்கத்தலைவர் திரு. எஸ். வி. முருகேசு இனந்தெரியாதவர்களால் கடத்தப்பட்டது பற்றி உடன் நடவடிக்கை எடுப்பதற்காக இன்று காலை யாழ். வர்த்தக சங்கக்கமிட்டி ஆலோசிக்கவிருப்பதாக, சங்கச்செயலாளர் திரு. வி. நமசிவாயம் தெரிவித்தார். [க]

## ரீகனின்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

1986-ம் ஆண்டுக்கான அமெரிக்க இராணுவச்செலவுகள் மசோதாமீது நடைபெற்ற விவாதத்தில் மக்கள் பிரதிநிதிகள் சபை ஒருமித்து இந்த முடிவை எடுத்துள்ளது.

## கொக்குவில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

காணவராவார்.

நேற்றுப் பிற்பகல் 4 மணியளவில் கொக்குவிலில் இச்சம்பவம் நடைபெற்றது.

நண்பரொருவருடன் கதைத்துக்கொண்டு நின்றவர் வீதியில் வந்தவர்களைக் கண்டு தமது மோட்டார் சைக்கில் ஏறி ஓடும்பொழுது துப்பாக்கியால் சுடப்பட்டதாகவும் பின்னர் வந்த வாகனத்தில் அவரும் மோட்டார் சைக்கிளும் ஏற்றிச்செல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (மா)

## குர்ஷித்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ரின் செயலினல் எழுந்துள்ள இந்த நிலைமைக்குப் பதிலடி கொடுக்கும் முகமாக தெற்காசிய பிராந்திய ஒத்துழைப்பு மாநாட்டில் பங்குபற்றும்நாடுகளுடன் தொடர்பு கொண்டு இதுபற்றி தெரிவிக்குமாறு பதில் வெளிவிவகார அமைச்சர் திரு. டிரோன் பெர்னண்டோ கேட்கப்பட்டுள்ளார்.

அமைச்சரவைக் கூட்டத்தைத் தொடர்ந்து நேற்று நடைபெற்ற செய்தியாளர்கள் மாநாட்டில் அமைச்சரவைப் பேச்சாளர் கலாநிதி ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் தெரிவித்ததாவது;

"இலங்கையைப் பற்றி அயல் நாட்டு பாராளுமன்றம் ஒன்றில் முற்றிலும் பிழையான விபரங்கள் தெரிவிக்கப்படும் பொழுது இதுபோன்ற பிராந்திய மாநாடுகளில் கலந்து கொள்வதில் பயனில்லை என்று இலங்கை அரசாங்கம் கருதுகிறது.

"இலங்கையில் பௌத்த மதத்துக்கு கொடுக்கப்பட்டுள்ள இடம் குறித்து ஜனுப் ஆலம்கான் தனது பேச்சில் மிகைப்படுத்தியிருந்தார்.

தமிழர்கள் பாரபட்சமாக நடத்தப்படுகின்றுர்கள் என்றும்; கட்டாய சிங்கள குடியேற்றம் நடத்தப்படுகின்றது என்றும் அவர் குற்றம் சாட்டியிருந்தார். இவை எல்லாம் தவறுன விபரங்கள்.

"தற்பொழுது லண்டனில் தங்கியிருக்கும் வெளிவிவகார அமைச்சர் ஜனுப் சாஹுல் ஹமீத்தை உடனடியாக நாடு திரும்பும்படி அரசாங்கம் கேட்டுள்ளது"

## சம்பவத்தின் எதிரொலி

[யாழ்ப்பாணம்]

வடமராட்சிப் பகுதியில் நேற்றுக்காலை இடம்பெற்ற குண்டுவெடிப்பு சம்பவத்தைத் தொடர்ந்து துப்பாக்கிச் சூட்டுக்கிலக்கான நால்வர் படுகாயமடைந்ததாகவும் இருவர் மரணமானதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்தவர்கள் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருவதாக ஆஸ்பத்திரி வட்டாரம் தெரிவித்துள்ளது. மா]

## நம்பூதிரிபாத்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மையான எதிர்ப்பைத் தெரிவித்தார்.

"இலங்கைத்தமிழர் பிரச்னையில் மத்திய அரசு வலுவான ஒரு முடிவை எடுத்து, விரைவில் அதற்கொரு தீர்வு காண வேண்டும் என்பதை வலியுறுத்திக் கூறுவதே தமது கட்சியின் நோக்கம்" என்றும் கலைஞர் தெரிவித்தார். [ரா]

## இலங்கை...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

உறவு இருக்கிறது என்று கூறப்படுகின்றது. இந்நிலையில் எமது எதிர்க்கட்சித் தலைவர் இந்தியப் பிரதமரை சந்தித்து இலங்கை இனப்பிரச்னையைத் தீர்த்துவைக்க வேண்டுமென்று நாம் அவரை கேட்டுக் கொள்ளவேண்டும்" என்று கருத்து வெளியிட்ட அவர்; இந்தப் பிரதேசத்தில் கடல் பாதுகாப்பு வலயமொன்றை ஏற்படுத்துப்படி இந்தியபிரதமரை கேட்டுக்கொள்ள வேண்டும். இப்படிசெய்வதின் மூலம் ஊடுருவலை தடுத்து நிறுத்துவதுடன் சிலமணித்தியாலங்களில் இலங்கை இனப்பிரச்னையை தீர்த்துவைக்க முடியும்.

இங்கே தமிழர்கள் பெருமளவில் வாழ்கின்றுர்கள் அவர்களை சிங்களவர்கள் தாக்கவில்லை. ஆனல் வடபகுதியில் சிங்கள மக்கள் வாழமுடியாத நிலைமையுள்ளது இதேநேரத்தில் கிழக்குமாகாணத்தில் முஸ்லிம் மக்களும் வாழமுடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது" என்றுகூறினர். (ரா)

## வர்த்தகர்கள் கடத்தப்பட்டனர்?

[மட்டக்களப்பு]

ஏறுவூரில் இரு வர்த்தகர்கள் கடத்திச் செல்லப்பட்டதைத் தொடர்ந்து அங்கு பதற்றநிலை ஏற்பட்டது.

இப்பகுதியால் சென்ற தனியார் பஸ்கள் மீது கற்கள் வீசப்பட்டதில் சில பிரயாணிகள் காயமடைந்தனர். (மா)

## எம். ஜி. ஆரை...

(1ம் பக்கத்தொடர்ச்சி)

மணிநேரம் தங்கியிருப்பார் என்றும் தமிழக முதல்வரைச் சந்தித்து இலங்கை நிலபரம் பற்றி கலந்துரையாடுவார் என்றும் தெரியவருகிறது.

## இளைஞர் பயிற்சி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இவர்களிடமிருந்து ஆயுதங்களும். தஸ்தாவேஜுகளும், முகாம் நுழைவாயில் வரைபடமும் கைப்பற்றப்பட்டுள்ளன.

லண்டனில் தங்கியிருக்கும் அமைச்சர் ஜனுப்ஹமீட், பூட்டானில் நடைபெறவிருக்கும் மாநாட்டில் கலந்துகொள்ள திட்டமிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (ரா)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்க அச்சகத்தில் 1985ம் ஆண்டு மே மாதம் 9-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number B 100236/81. Eelanadu- P. O. Box 49 Telegram Eelanadu, Telephone: 22389-24126